# இந்து சாதனம்

## HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : விரோதி ஞு ஆவணி மீ 26 ஆம் உ (1889)

web : www.hinduorgan.com
e-mail : editor@hinduorgan.com

புத்தகம் : 122
இதழ் : 04

விகிர்தி வருடம் மார்கழி திங்கள் 1 ஆம் நாள்
(16.12.2010)

பிரதி விலை
ரூபா. 50.00


## தில்லைச் சிதம்பரம்

சிவா - சரணன்

அல்லல்களும் அவலங்களும், சிக்கல்களும் சிரமங்களும் துன்பங்களும்; துயரங்களும் நிறைந்த இந்தப் பொல்லாத மானுடப் பிறவியிலிருந்து விடுபட்டு எல்லாம் வல்ல ஈசன் எந்தை இணையடி நீழலில் இளைப்பாறும் இன்பத்தை அனுபவிக்கும் நாள் எந்நாளோ என்ற ஏக்கம் –

நன்றே செய்க – அதனை இன்றே செய்க – அதுவும் இன்னே செய்க. கொன்றையந்தாரனின் கொய்மலர்ச் சேவடிகளைக் குறுகுவதற்கு இதுவே சிறந்த வழி என்ற உபதேசம்–

நமது சமய நூல்கள் விதிப்பவற்றைச் செய்யாமலும்; விலக்கியவற்றைச் செய்துகொண்டுமிருந்தால், இந்தப் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை சேரவே முடியாது என்ற எச்சரிக்கை–

போன்றவற்றைப் பெரும்பாலான அருளாளர்களும், ஆன்மீகப் பெரியார்களும், அநுபூதிமான்களும் அடிக்கடி வெளியிட்டுக்கொண்டிருக்க, இந்த மனிதப் பிறவியை நாம் ஏன் விட்டுவிட வேண்டும்? தில்லைக்கூத்தனின் திருநடனக் காட்சியில் திளைக்கும் பாக்கியத்தை இந்த மானிடப் பிறவிதானே நமக்கெல்லாம் அளிக்கின்றது என்று நினைவூட்டும் வகையில்

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே!"

எனப் பாடிப்பாடிப் பரவசப்படுகின்றார் திருநாவுக்கரசு நாயனார்.



சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஸமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜப் பெருமான் - தெப்பக் குளத்துடனான கோபுர வாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாக வளைந்துள்ள புருவம். கொவ்வைக் கனியாகச் சிவந்துள்ள திருவாய், அதில் மலராக விரியும் புன்சிரிப்பு பனியாகக் குளிரும் செஞ்சடை, பவளமாக மினுங்கும் திருமேனி, அதில் பாலாகப் படர்ந்துள்ள திருநீறு, எடுப்பாகத் திகழும் எடுத்த பொற் பாதம் முதலியவற்றைக் கண்ணாரக் கண்டு, மனதார மகிழ்ந்து, வாயாரப் பாடும்படி தாண்டக வேந்தரைத் தூண்டிய தாண்டவ வேந்தர் அல்லும் பகலும் அநவரதமும் அந்த ஆனந்தத் தாண்டவத்தை ஆடிக் கொண்டிருக்கும் திருத்தலம் தில்லைச் சிதம்பரம்.

ஏனைய கோயில்கள் எல்லாம் காஞ்சி கைலாசநாதர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில் என ஊர்ப் பெயர், கருவறையில் அமர்ந்து அருளாட்சி செய்யும் தெய்வத்தின் பெயர் ஆகியவற்றுடன் இணைந்துவர, **கோயில்** என்ற தனிப் பெயருடன் விளங்கும் தனிச் சிறப்பு மிக்கது தில்லைச் சிதம்பரம்.

சிவன் கோவில்களில், சிவபெருமானின் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் இருக்கும் இடம் மூலஸ்தானம் – மூலத்தானம் எனப்படுகின்றது. ஆனால், சிதம்பரத்திலும் திருவாரூர்த் தியாகேசர் கோயிலிலும் இருக்கின்ற மூலத்தானங் களுக்கு மட்டும் "திரு" என்ற அடைமொழி கொடுக்கப்பெற்று, அவை திருமூலத்தானம் – திருமூலட்டானம் என அழைக்கப்பெறும் சிறப்பைப் பெறுகின்றன.

"ஆதியும் அந்தமும் அற்றவன் ஆண்டவன். அவன் எப்போது தோன்றினான்? எங்கே தோன்றினான்? எப்படித் தோன்றினான்? – என்ற கேள்விகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டவன் அவன். ஆனால், அவன் சாந்நித்தியமாயிருக்கும் ஆலயங்களுக்கு 'ஆதி' உண்டு; ஆரம்பம் உண்டு! அதை அறிந்துகொள்ளும் வாய்ப்புக்களும் உண்டு!" முன்னர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந் தேன். எனினும் கோயில்களுக்கெல்லாம் தலைமைக் கோயிலாக – மூலக் கோயிலாக – "கோயில்" என்ற தனிச்சிறப்புப் பெயருடன் திகழும். இந்தத் திருத்தலம் முதன் முதலில் எப்போது தோன்றியது என்பதை அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் அரிதாகவே உள்ளன.

முன்னொரு காலத்திலே மத்தியந்தனர் என்ற முனிவர் தன் தவப்புதல்வருக்குக் கற்பிக்கவேண்டிய கல்வி அனைத்தையும் கற்பித்து முடித்தார். அறிவுச் செல்வத்தைப் பெற்ற அப்புதல்வர், கல்வியின் பயன் கடவுளை வழிபடுதலே என்பதை உணர்ந்தார். எங்கே சென்று இறைவனை வழிபடலாம் எனத் தந்தையைக் கேட்டார். தில்லைப்பதிக்குச் செல்லும்படி மகனை அனுப்பி வைத்தார் மத்தியந்தன முனிவர். தந்தை சொற்படி தில்லைவனத் துக்குச் சென்ற அந்த முனிகுமாரர், அங்கே அழகிய ஒரு தடாகமும், அதன் தென் பக்கத்திலுள்ள ஆலமர நீழலில் சிவலிங்கத் திருவுருவமும் இருப்பதைக் கண்டார். அவ்விடத்தில் ஒரு தவச் சாலையை அமைத்துச் சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கத் தொடங்கினார். பூசைக்காக அவர் பறித்து வைத்த பூக்களை ஒரு நாள் ஆராய்ந்து பார்த்தபோது அவை வண்டு ஊதியனவாகவும் பழுதுற்றனவாகவும் இருந்ததைக் கண்டார். விடிவதற்கு முன் இருட்டில் மரங்களில் ஏறிப் பூப்பறிக்க முயன்றபோது பனி காரண மாகக் கால்கள் வழுக்கத் தொடங்கின; இருட்டு, பார்வையையும் மறைத்தது. இறைவனை மன முருகிப் பிரார்த்தித்தார். இறைவன் தோன்றவே, மரத்தில் ஏறி இறங்கும்போது கால்கள் வழுக்கா மலிருக்கும்படி கால்களிற் கூரிய நகங்கள் வளரவும் கால்களிலும் கைகளிலும் கண்கள் உண்டாகவும் அந்த இறைவனிடம் வேண்டி னார். உண்மையான அடியவரின் நியாயமான கோரிக்கையை இறைவன் ஏற்றருளினான். அடுத்த கணமே, முனிகுமாரரின் கால் விரல்களில், புலியின் நகங்களைப்போல் கூரிய நகங்கள் தோன்றின. கண்களும் உருவாகின. அன்று முதல் அந்த முனிகுமாரர் புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) ஆனார். அதனால், அவரிருந்து வழிபட்ட அந்தப் பிரதேசம் புலியூர் ஆனது. சிவபெருமானைமட்டும் பற்றாகக் கொண்டு அவர் வாழ்ந்தபடியால் 'பெரும்பற்ற புலியூர்' எனவும் பெயர் பெற்றது. முன்னொருகால் தேவதாரு வனத்தில் முனிவர்கள் பலரின் முன்னிலையிற் சிவபெருமான் ஆடிய ஆனந்த நடனத்தைத் தானும் காண வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இறைவனைத் தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். வியாக்கிரபாதர்.

அதேவேளை அந்த ஆனந்த நடனத்தின் சிறப்பை மஹா விஷ்ணுமூர்த்தி சொல்லக்கேட்ட ஆதிசேடனுக்கும் அந்த நடனத்தைப் பார்க்கும் ஆவல் ஏற்பட்டது. மஹாவிஷ்ணுமூர்த்தி விடையளிக்க, ஆதிசேடன் வடகைலைக்குச் சென்று சிவபெரு மானை நோக்கித் தவம் செய்தான். தவத்திற்கிரங்கி அவன்முன் தோன்றிய சிவபெருமான், பாம்புருவை நீக்கிப் பதஞ்சலி முனிவராகித் தில்லைவனத்துக்குச் செல்லும்படியும், ஆனந்த நடனத்தைக் காணவேண்டித் தன்னை வழிபட்டுக்கொண்டிருக்கும் வியாக்கிரபாதருடன் சேர்ந்துகொள்ளுமாறும் சொல்லியருளி னார். அதன்படி ஆதிசேடன் பதஞ்சலி முனிவரானான்; புலியூருக்குச் சென்று வியாக்கிரபாதருடன் சேர்ந்து, சிவ வழிபாட்டைத் தொடர்ந்தான்.

ஏற்கனவே சொன்னபடி தைப்பூச நன்னாளிலே சிவகாமி அம்மையாரும், பிரம்மாவும், விஷ்ணுவும் மூவாயிரம் முனிவர்களும் காணும்படி ஆனந்தத் திருநடனத்தை ஆடினான் இறைவன். உடலும் உள்ளமும் உருக அந்த அற்புதக் காட்சியிலே திளைத்த வியாக்கிரபாதரும், பதஞ்சலி முனிவரும், அந்தத் தில்லைப் பதியில் எந்நாளும் எக்கணமும் எவ்வித இடையீடுமின்றி அந்த நடனம் இடம்பெறவேண்டும் எனப் பிரார்த்தித்தனர். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பெருமான் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க, தன் ஆனந்த நடனத்தை அக்கணத்திலிருந்தே தொடர்ந்தார்!

தில்லைப் பதியின் கருவாகவும், கருத்தாகவும், கண்ணாகவும் திகழும் தனிப்பெரும் கோயில் கட்டப்பெற்ற காலம், அந்தப் பெரும்பணியை முன்னின்று நிறைவேற்றிய மன்னர்கள், அமைச்சர்கள், பெருநிலக் கிழார்கள் காலத்துக்குக் காலம் செய்யப்பெற்ற கட்டடத் திருப்பணிகள், நிறைவேற்றப்பட்ட கும்பாபிஷேகங்கள் போன்றவற்றை விபரமாகக் கூறும் கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள் அரச ஆணைகள் பல இருக்கின்றபோதிலும் இவையனைத்துக்கும் வித்தாக உள்ள முன்னைய தெய்வீக நிகழ்ச்சிகள் எப்போது இடம்பெற்றன என்பது

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டவட்டமாகக் கூறப்படாததனாலும், அந்த இடம் காலாதி காலமாகவே தெய்வீக சாந்நித்தியம் நிறைந்த இடமாக இருந்ததை அந்த நிகழ்ச்சிகள் காட்டுவதாலும், ஆண்டவனைப்போல், அந்த இடத்தில் எழுந்த இந்தத் திருத்தலமும் அநாதியானதென்றே கொள்ளப்படல் வேண்டும்.

நாற்பத்திரண்டு ஏக்கர் நிலப்பரப்பில், நான்கு திசைகளிலும் ஒவ்வொரு பெரிய கோபுரத்துடன் திகழ்கின்றது, அழகுப் பொலிவும் அருட்சிறப்பும் ஆனந்தக் களிப்பும் இணைந்த இந்தத் திருப்பெருங்கோயில். விநாயகர், முக்குறுணி விநாயகர், கற்பக விநாயகர், தங்கமூல விநாயகர், வல்லப கணபதி, மோகன கணபதி, திருமுறைகண்ட விநாயகர், சுப்பிரமணியர் ஆறுமுகப் பெருமான் சித்திர புத்திரர், துர்க்கை அம்பாள், தட்சணாமூர்த்தி, மீனாட்சி சுந்தரேஸ்வரர், சிவகாமி அம்மை, வியாக்கிரபாதரால் ஆதியிற் பூசிக்கப்பெற்ற சிவலிங்கப்பெருமான் (திருமூலட்டானேஸ்வரர்) பார்வதி அம்பாள், கோவிந்தராஜப் பெருமாள் முதலிய பல மூர்த்திகளுக்குத் தனிச் சந்நிதானங்கள் இருக்கின்றன. திருவுலாச் செல்லும் பஞ்சமூர்த்திகளின் திருவுருவங்களைத் தேவ சபையிலே தரிசிக்கலாம்.

பொன் வேயப்பெற்ற கூரையுடனும் ஒன்பது தங்கக் கலசங்களுடனும் கூடிய சிற்றம்பலத்திலே, தென்பாலுகந்தாடும் கூத்தப் பெருமானையும் அந்த ஆனந்தக் கூத்தைக் கண்டு களிக்கும் சிவகாமி அம்பாளையும் தரிசித்து மகிழலாம். கூத்தப் பெருமான், அம்மை காண ஆடும் இந்த அம்பலத்தைத் திருச்சிற்றம்பலம் எனவும் அந்த அம்பலத்தின்மேல் பொன் வேயப்பெற்ற புறப்பகுதியைப் பேரம்பலம் எனவும் ஞானசம்பந்தப் பிள்ளையார் போற்றியுள்ளார்; திருநாவுக்கரசர் இச்சந்நிதியைத் தில்லைச் சிற்றம்பலம் எனவும் தில்லையம்பலம் எனவும் போற்றியுள்ளார்; திருமூலநாயனார் பொன்னம்பலம் எனவும் போற்றியுள்ளார். சிற்றம்பலம் என்பது நுண்ணிய ஞானவெளி என்ற கருத்துடையது; இந்தத் தமிழ்ச் சொல்லே வடமொழியில் சிதம்பரம் என்றானது.

திருச்சிற்றம்பலத்திலுள்ள சதாசிவ பீடத்திலே நடராஜப் பெருமானும் சிவகாமி அம்பாளும் எழுந்தருளியுள்ளனர். வலப்பக்கமுள்ள பிரணவ பீடத்திலே சிதம்பரரகசியம் அமைந்துள்ளது. இறைவனின் அருவத் திருமேனியாகிய இச்சந்நிதி, பெருவெளியாக – ஆகாச வெளியாக இறைவன் விளங்கும் திறத்தைப் புலப்படுத்துகின்றது; வில்வப் பொன்னிதழ் மாலை தொங்கவிடப்பட்டுக் கறுப்புத்துணியால் மறைக்கப் பெற்றுள்ளது. தில்லை வாழந்தணர் உள்ளிருந்து திரை விலக்கிக் கற்பூரம் காட்டும் நிலையில், சிற்றம்பலத்தில் அமைந்த பலகணி வாயிலாக அடியார்கள் இதைத் தரிசிக்கலாம். நடராசப் பெருமானுக்கு அருகே மாணிக்கக் கூத்தராகிய இரத்தின சபாபதியின் திருவுருவம் அமைந்த பேழையும் படிகலிங்கம் அமைந்த பேழையும் வைக்கப்பெற்றுள்ளன. ஆகவே சிற்றம்பலத்திலே இறைவனின் அருவத் திருமேனியாகிய சிதம்பர ரகசியத்தையும் உருவத் திருமேனியாகிய நடராஜப் பெருமானையும் அருவுருவத் திருமேனியாகிய படிகலிங்கத்தையும் ஒருங்கே தரிசிக்கலாம்.

இறைவன் ஆனந்த நடனம் ~~புரியும்~~ சிற்றம்பலம் சிற்சபை எனவும் அதற்கு முன்னுள்ள எதிரம்பலம் கனகசபை எனவும், கொடி மரத்துக்குத் தெற்கேயுள்ள ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் சந்நிதி நிருத்தசபை எனவும் சோமாஸ்கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகள் இருக்கும் சபை தேவசபை எனவும் ஆயிரங்கால் மண்டபம் இராசசபை எனவும் வழங்கப்பெறுகின்றன.

நாள் தோறும் காலை ஆறு மணிக்குத் தில்லைப் பெருங்கோயில் திறக்கப்பெறுகின்றது. பள்ளியறையிலிருக்கும் இறைவன் திருவடிக்குப் பால், பழம் முதலியன நிவேதனஞ் செய்து, திருவடியைச் சிவிகையில் இருத்திச் சிற்றம்பலத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனர்.

இங்கே தினமும் ஆறுகாலப் பூசை நடைபெறுகின்றது. சந்திர மௌலீசராகிய படிகலிங்கத்துக்கு அபிடேக ஆராதனைகள் நிறைவேறிய பின்னரே கூத்தப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் தீபாராதனை நடைபெறுகின்றது. காலை ஒன்பது மணிக்குக் காலை சந்தியும் பதினொரு மணிக்கு இரண்டாங்காலமும் பன்னிரண்டு மணிக்கு உச்சிக்காலப் பூசையும் நடைபெறுகின்றன. இரண்டாங் காலப் பூசையில் பகல் பத்துமணிக்குப் படிகலிங்கத்துக்கு அபிஷேகம் செய்த பின்னர், மாணிக்கக் கூத்தராகிய இரத்தின சபாபதிக்கும் அபிஷேகம் செய்து அத்திருவுருவத்துக்கு முன்னும் பின்னும் கற்பூர தீபம் காட்டுவதைக் காண்பதே பெரும் பேறு.

மாலை ஐந்து மணிக்கு மீண்டும் திருக்கோயில் கதவு திறக்கப்பட்டுப் படிகலிங்க அபிஷேகம் நடைபெறுகின்றது. பின்னர் சாயரட்சைப் பூசையைத் தொடர்ந்து ஏழுமணியளவில் படிகலிங்க அபிஷேகமும் ஏழரை மணியளவில் சிதம்பரரகசிய பூசையும் பின்னர் எட்டு மணிக்கு இரண்டாங்காலப் பூசையும் நடை பெறுகின்றன. ஒன்பதரை மணிக்குப் படிகலிங்க அபிஷேகம் நடந்த பின்னர் பத்து மணிக்கு அர்த்தசாமப் பூசை இடம்பெறுகின்றது. எல்லாத் திருக்கோயில்களிலும் எழுந்தருளியுள்ள இறைவனது திருவருட் கலைகள் அனைத்தும் தில்லையம்பலக்கூத்தன்பால் வந்து ஒடுங்குகின்றன என்பதை அப்பரடிகளின் திருத்தாண்டகம் ஒன்று காட்டுகின்றது. அதனால் தில்லையில் நடைபெறும் அர்த்தசாம வழிபாடு தனிச் சிறப்புப் பெறுகின்றது. தில்லைக் கூத்தருக்குத் தீபாராதனை நிறைவேறிய பின்னர், சிற்சபையிலுள்ள பெருமான் திருவடி சிவிகையில் அமர்த்தப்பெற்றுப் பள்ளியறைக்குக் கொண்டு போகப்படுகின்றது. சண்டேஸ்வரர், வைரவர் ஆகியோருக்குத் தீபாராதனையும் அதைத் தொடர்ந்து அர்த்தசாம அழகர் தீபாராதனையும் நிறைவேற்றப்படுவதுடன் அர்த்தசாமப் பூசை முடிவடைகின்றது.

இங்கு நடைபெறும் பல்வேறு திருவிழாக்களுக்கும் தனிச்சிறப்பு உண்டெனினும் ஆனித்திருமஞ்சனமும் மார்கழித் திருவாதிரை விழாவும் ஈடிணையற்றவை. கொடியேற்றம் தொடக்கம் எட்டாந் திருவிழா முடிய விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், அம்பாள், சண்டேஸ்வரர் ஆகிய பஞ்ச மூர்த்திகள் காலையிலும் மாலையிலும் வீதியுலா வருகின்றனர். ஒன்பதாந் திருவிழாவன்று நடராஜப் பெருமான், சிவகாமி அம்பாள் ஆகியோர் தேரேறி விநாயகர், முருகன், சண்டேஸ்வரருடன் வீதியுலா வருகின்றனர்.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பக்கதரின் வேண்டுகோள்

– கைலாஸ தண்டபாணி தீட்சிதர்

ஒரு சமயம் மார்கழித் திருவாதிரைத் திருநாளில், பனிக்குளிர் மிகுதியாக இருந்த வைகறைப்போதில் "ராஜசபை" யான ஆயிரங்கால் மண்டபத்தில் சிதம்பர நடராஜப் பெருமானுக்கு ஆர்த்ராபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பஞ்சாமிர்தம், பால் தயிர், பலவகைப் பழங்கள், கருப்பஞ்சாறு நெய், தேன், பன்னீர், இளநீர் எனக் குளிரை அதிகரிக்கச் செய்யும் திரவியங்களால் அபிஷேகம் செய்த பின்னர் பதினைந்து குடங்கள் வரையிலான சந்தன அபிஷேகம் தொடர்ந்தது அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த அடியார் ஒருவர் பக்தி மேலீட்டினால், "பிரபுவே! நடராஜ மூர்த்தியே! இந்தக் குளிர் காலத்தில் உன் தலையிலே கங்கையும் சந்திரனும் கை, கால்களில் ஆபரணமாகப் பாம்புகளும், இடது பக்கத்திலே பனிமலை ராஜாவின் மகளான பார்வதி தேவியும் இருப்பதே தாங்க முடியாத குளிரல்லவா? இவற்றிற்கும் மேலாக இத்தனை குளிர்ந்த திரவியங்களுடன் அமையாது, அளவில்லாத சந்தனத்தையும் அபிஷேகம் செய்கின்றார்களே! இத்துணை குளிரையும் உன்னால் தாங்க முடியுமா? என்னிடமுள்ள குறைபாடுகளாலோ என்னவோ என்னுடைய இருதயம் எப்போதும்போல் இப்போதும் கொதித்துக்கொண்டே இருக்கிறது. மெல்ல எழுந்து என்னுடைய இருதயத்துக்குள் நீ வந்துவிட்டால் இங்கிருக்கின்ற உஷ்ணம் உன்னைக் குளிரிலிருந்து பாதுகாக்கும். என்னுள் வந்திருந்து அருள் புரிவாயா? என்று கேட்டதை விபரிக்கும் சுலோகம் ஒன்று உள்ளதாகப் பெரியோர்கள் சொல்கிறார்கள்.

3ஆம் பக்கத் தொடர்ச்சி...

மாலையில் தேரிலிருந்து இறங்கும் கூத்தப்பிரானும் அம்பாளும் ஆயிரங்கால் மண்டபத்துக்கு எழுந்தருளுகின்றனர். அடுத்த வைகறைப் போதில் மிகச் சிறப்பான முறையில் அபிஷேகம் செய்யப்பெற்று, நண்பகலில் தெய்வீக அலங்காரங்களுடன் நடன மாடியபடியே சிற்றம்பலத்துக்குச் செல்கின்றனர். ஆயிரங்கால் மண்டபத்தில் நடைபெறும் அபிஷேகச் சிறப்பு, வார்த்தைகளுக்குள் அடங்காதது. அந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பவர்களுக்குத்தான் அதன் அருமையும் பெருமையும் அருட்பொலிவும் புரியும்.

திருவிழாச் சிறப்புடனும் திருவருட் பெருக்குடனும் சிவநெறித் தத்துவங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு ஒருருவம் பெற்று ஒப்பற்ற பேரொளியெனத் திகழும் இத் தில்லைச் சிதம்பரம் இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்புவரை, இலங்கைச் சைவத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்களுக்கு அடுத்த "வீடு" ஆக இருந்தது.! ஆயிரக்கணக்கானோர் ஆண்டுதோறும் அங்கு சென்று ஆனந்த நடராசரைத் தரிசிப்பதைத் தம் வழக்கமாகக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள காணிகள் பல சிதம்பரம் திருக்கோயிலுக்குத் தர்ம சாதனஞ் செய்யப் பெற்றிருந்தன.

அந்நிய ஆட்சியாளரின் உணவுக்காகப் பசு ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாட்டிற்கு உடன்பட மறுத்து, இரவோடிரவாக இந்நாட்டைத் துறந்து சென்ற ஞானப்பிரகா சருக்குத் தஞ்சமளித்தது இந்தத் தெய்வத் திருத்தலந்தான். வடமொழி தென்மொழி வல்லுநரான அவர் சிவஞான சித்தியாருக்கு உரை எழுதிப் பெருந் தொண்டுசெய்தவர். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்ற குளத்தையும் அதனருகே ஒரு மடத்தையும் கட்டுவித்தவர் இவரே.

ஒரு காலத்தில் மிகச் சிறப்பான நிலையில் இருந்த சிவபுரி மடம், செவ்வாய்க்கிழமை மடம், வடக்கு மடம், மானா முதலியார் மடம் புண்ணியநாச்சிமடம் ஆகியவற்றைக் கட்டி நல்ல முறையிலே அவற்றைச் செயற்பட வைத்தவர்கள் யாழ்ப்பாணத்தவர்களே, இவற்றுள் புண்ணியநாச்சிமடம், சில ஆண்டுகளுக்கு முன்னர் புதுப்பிக்கப்பெற்று, நவீன வசதிகளுடன் விளங்குகின்றது. இங்கிருந்து செல்லும் யாத்திரிகர்கள் பலர் தங்கி நின்று நிம்மதியாக சுவாமி தரிசனம் செய்ய உதவுவது இந்த மடந்தான்.

சிதம்பரத் திருத்தலம் சம்பந்தமான இந்தச் சுருக்க வரலாறு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களைப்பற்றிக் குறிப்பிடாவிட்டால், நிறைவுறாது. தமிழுக்கும் சைவத்திற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்ட அவர், சைவத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக இங்கே சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இவ்வித்தியாசாலைக்கு அண்மையில் அவர் நிறுவிய வித்தியானுபால யந்திரசாலையில் திருக்குறள், தொல்காப்பியம் முதலிய தொன்னூல்களையும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய சைவ இலக்கிய நூல்களையும் பிழையறப் பதிப்பித்தார். மேற்போந்த கல்வி நிறுவனம் சிதம்பரத்தின் மேலை வீதியில் அவரின் புகழுருவாக இன்றுந் திகழ்ந்து, யாழ்ப்பாணத்துக்கும் சிதம்பரத்துக்குமிடையிலான சைவத் தமிழ்க் கலாசாரத் தொடர்புகளை வலுப்படுத்தி வருகின்றது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே.

என்ற அப்பரடிகளின் திருத்தாண்டகத்தை நினைவில் நிறுத்தி, தில்லைப் பெருமானின் திருத்தாண்டவத்தைக் காட்டி அருளும்படி அதே பெருமானின் பேரருளைக் கோருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரம்




"கோயில் என்ற தனிச் சிறப்புடன் திகழும் தில்லைச் சிதம்பரத்தில் அல்லும் பகலும் அநவரதமும் ஆடிடும் கூத்தப் பெருமானின் திருவுளக் குறிப்பின்படி அத் திருத்தலத்திற்கு அண்மையிலிருந்து கொண்டுவரப்பெற்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளமை; தில்லைப் பதியிலேயே அழகான சோமாஸ்கந்த மூர்த்தி வார்க்கப் பட்டு எடுத்துவரப்பெற்றமை; - கூத்தப்பிரானுக்குரிய அபிஷேக ஆராதனைகள், தில்லைச்சிதம்பரத்தைப் பின்பற்றி நிகழ்த்தப்பெறுகின்றமை; தில்லைக்கு வந்து என்னைத் தரிசிக்க முடியவில்லையே எனக் கவலைப்பட வேண்டாம். காரைநகர்த் திண்ணபுரத்துச் சிவாலயத்தில் என்னைத் தரிசிக்கலாம்" எனச் சில அடியார்களின் கனவிலே தில்லைக் கூத்தன் தோன்றியருளியமை - போன்ற தெய்வீகக் காரணங்களால் "ஈழத்துச் சிதம்பரம்" என்ற தனிச்சிறப்புக்கு இலக்காகியுள்ள காரைநகர்த் திண்ணபுரம் சௌந்தராம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரப் பெருமானின் திருக்கோவிலில் கடந்த 13.12.2010 திங்கட்கிழமை ஆரம்பமான திருவெம்பாவைத் திருவிழா மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 21. 12. 2010 செவ்வாய்க்கிழமை பஞ்சரத பவனியும், 22. 12. 2010 புதன்கிழமை அதிகாலை வசந்தமண்டபத்திலே கூத்தப்பிரானுக்குரிய ஆருத்ராபிஷேகமும் அன்று பிற்பகலில் நடராஜப்பெருமானின் வீதியுலாவும் தீர்த்தோற்சவம் முதலியனவும் நடைபெறுகின்றன.

வானவர் தானவர் வையகத் தோரெலாம்
வருமீழச் சிதம்பரத்தில்
ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் வேந்தருக்(கு)
ஆருத்ரா தன்னாளிலே
தேனொடு பால் தயிர் நெய்யிளநீர், கனி
கொண்டு சாத்து பண்ணி
வானிழி கங்கையாய்ச் சொரிந்திடும் காட்சியின்
மாண்பினை பாடி மகிழ்வோம். - சிற்பி

### மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையினர் நடத்தும் மணிவாசகர் விழா 17.12.2010 வெள்ளிக்கிழமை தொடக்கம் 21.12.2010 செவ்வாய்க் கிழமைவரை ஆலய மண்டபத்தில் நடைபெறுகின்றது. சொல்லின் செல்வர் ஆறுதிருமுருகன், தமிழருவி த. சிவகுமாரன் உள்ளிட்ட ஈழத்துச்சைவப்பேரறிஞர்களும், தமிழ் நாட்டிலுள்ள உலகச் சைவப் பேரவை, கனடா சைவப்பேரவை, கனடா சைவசித்தாந்த மன்றம், லண்டன் மெய்கண்டார் ஆதீனம், ஜேர்மனி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம், சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை ஆகியவற்றைச் சேர்ந்த அறிஞர்களும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகின்றார்கள்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஆரம்பித்து வைக்கும் இவ்விழாவில் திருப்பனந்தாள் காசி திருமடத்தின் இணையடிகள் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளும் கலந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்

(இந்து சாதனம் 2010 கார்த்திகை மாதம் 08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய கோளறு பதிகம்

**பொது** **பண்: பியந்தைக் காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

.பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனான்
மலர்மிசை யோனு மாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (9)

**பதவுரை:-**

பல பல **வேடமாகும் பரன்** – பலப்பலவாகிய திருவுருவங்களோடு கூடிய மேலானவரும், **நாரி பாகன்** – உமா தேவியைப் பாகத்தில் கொண்டவரும், **பசு ஏறும் எங்கள் பரமன்** இடபத்தில் ஊர்ந்தருளுகின்ற அடியேங்களது தலைவருமான சிவபெருமான், **சலமகளோடு** – கங்கையாகிய நங்கையோடு, **எருக்கு** – எருக்கம்பூவையும், **முடிமேல் அணிந்து** – திருமுடியில் தரித்து, **என் உளமே புகுந்த அதனால்** – அடியேனது உள்ளத்தில் எழுந்த காரணத்தால், **மலர் மிசையோனும்** – தாமரைப் பூவில் இருப்பவராகிய பிரமதேவரும், **மாலும்** – விட்டுணுமூர்த்தியும், **மறையோடு தேவர்** – வேதங்களோடு பிற தேவர்களும், **வருகாலம்** – சுழன்று வரும் காலமும், **அலைகடல்** – திரை பொருந்திய சமுத்திரமும், **மேரு ஆனபலவும்** – மேரு மலையும் ஆகிய எல்லாம், **அடியார் அவர்க்கு** – சிவனடியார்களுக்கு, **அவை மிகவே நல்ல நல்ல** – அவை மிகவும் நல்லனவாகவே இருக்கும்.

**பொழிப்புரை:**

பல்வேறு திருவுருவங்களோடு இருப்பவரும், உமா தேவியாரைப் பாகத்திற் கொண்டவரும், இடபத்தில் ஏறிவருபவரும், எங்கள் தலைவருமான சிவபெருமான், கங்கையையும் எருக்கம்பூவையும் தன் திருமுடியிலே தரித்து, அடியேனது உள்ளத்தில் எழுந்தருளி இருக்கின்ற காரணத்தால், பிரமதேவர், விட்டுணுமூர்த்தி, வேதங்கள், பிறதேவர்கள், இனிவருங்காலம், சமுத்திரம், மேரு முதலிய மலைகள் ஆகிய எல்லாமே அடியார்களுக்கு நல்லன வற்றையே செய்யும்

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனாற்
புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல்
திரு நீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (10)

**பதவுரை:**

**கொத்து அலர் குழலியோடு** – பூங்கொத்து அலர்ந்த கூந்தலையுடைய உமாதேவியாரோடு, **விசயற்கு நல்கும்** – அருச்சுனனுக்குப் பாசுபதத்தைக் கொடுத்தருளிய, **குணமாய வேட விகிர்தன்** – நன்மையையுடைய வேடராகிய ஆன்மநாயகர், **மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து** – மதமத்தம் பூவையும், பாலசந்திரனையும், பாம்பையும் திருமுடியில் தரித்து, **என் உளம் புகுந்த அதனால்** – என்னுடைய உள்ளத்திலே கோயில் கொண்டருளிய காரணத்தால், **அண்ணல் திருநீறு** – பெருமையிற் சிறந்தவராகிய சிவபெருமானுடைய விபூதி, **புத்தரொடு அமணைவாதில் அழிக்கும்** – புறச்சமயத்தவர்களாகிய புத்தரையும், சமணரையும் தர்க்கத்திற் தோற்கச் செய்து அழிக்கும், **செம்மை திடம்** – இது உண்மையும் நிச்சயமு மாகும்; **அத்தகு** – அந்தத் தகுதியினால், **அடியாரவர்க்கு மிகவே** – சிவனடியார் களுக்கு மிகுதியாக, **அவை நல்ல நல்ல** – அவை எப்பொழுதும் நன்மைகளையே செய்யும்.

**பொழிப்புரை:-**

பூங்கொத்தணிந்த கூந்தலையுடைய உமாதேவியா ரோடு சேர்ந்து அர்ச்சுனனுக்குப் பாசுபதத்தை அளித்த சிவபெருமான், மதமத்தம் பூ, பிறைச்சந்திரன், பாம்பு ஆகியவற்றைத் திருமுடியில் தரித்து என் உள்ளத்தில் இருக்கின்ற காரணத்தால், அவருடைய திருநீறு, புத்தர், சமணர் ஆகியோரைத் தர்க்கத்தில் வென்று அவர்களை அழிக்கும். ஆகவே அவர்களால், சிவனடியார்களுக்குத் தீமை ஏதும் ஏற்படாமல் எப்போதும் நன்மையே ஏற்படும்.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலை ஒது மடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே. (11)

**பதவுரை:-**

**செம்பொன் எங்கும் நிகழ** – மாற்றுயர்ந்த பொன்னானது எல்லா இடத்திலும் பரவும்படி, **தேன் அமர் பொழில்கொள் ஆலை** – தேன் பொருந்திய சோலைகளைக் கொண்ட கரும்புகளும், **விளை செந்நெல் துன்னி வளர்** – விளைகின்ற செந்நெல்லும் நெருங்கி வளர்கின்ற, **நான்முகன் ஆதியாய பிரமா புரத்து** – பிரமதேவர் முதலிற் பூசித்த பிரமபுரம் என்னும் பெயருடைய சீகாழியிலே திருவவதாரஞ் செய்த, **மறைஞான ஞான முனிவன்** – வேதம் முதலிய கலை ஞானமும், அவைகளுக்கு மேலான பரஞானமும் ஆகிய எல்லா ஞானங்களையுமுடைய திருஞான சம்பந்தன், **உறுகோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம்** – பொருந்திய கிரகங்களும், நட்சத்திரங்களும் சிவனடியார்களைப் பீடிக்காத வண்ணம், **உரைசெய் ஆன சொன்மாலையோதும் அடியார்கள்** – திருவாய்மலர்ந்த நன்மை பயத்தற்கேதுவாகிய, சொன்மாலையாகிய திருப்பதிகத்தை ஓதுகின்ற திருத்தொண்டர்கள், **வானில் அரசாள்வர்** – மேலுலகத்தில் அரசராக ஆளக்கடவர்கள், **ஆணைநமதே** – இது நமது கட்டளை.

**பொழிப்புரை:-**

தேன் பொருந்திய கரும்புச் சோலைகளையும், செந்நெல் வளர்கின்ற வயல்களையும் கொண்டு செல்வச் செழிப்புடன் விளங்கும் பிரமபுரம் என்ற சீர்காழியிலே திருவவதாரஞ் செய்த திருஞானசம்பந்தன் கிரகங்களும் நட்சத்திரங்களும் அடியார்களைத் தாக்காத வண்ணம் பாடிய இப்பாடல்களைப் பாடுபவர்கள் மேலுலகத்தில் அரசராக ஆள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தம்

முனைவர் ஆ.ஆனந்தராசன்

(இந்துசாதனம் – கார்த்திகை மாதம் 2010 – 15ஆம் பக்கத் தொடர்)

**புதுவினை உண்டாதல்**

**168. முற்பிறப்பிற் செய்த வினை முழுவதையும் இப்பிறப்பில் அனுபவித்து விட்டால் அடுத்த பிறப்பிற்கு வினை யில்லாது போகுமே. அங்ஙனமாயின், அடுத்த பிறப்பு எவ்வாறு நிகழும்? அடுத்த பிறப்புக்குக் காரணமான வினை எவ்வாறு தோன்றும்?**

முற்பிறப்பிற் செய்த வினை முழுவதையும் இப்பிறப்பில் அனுபவித்து விடுவதில்லை. இப்பொழுது அனுபவிக்கும் வினை மிகக் குறைவுதான். அனுபவிக்கப்படாது எஞ்சிக் கிடக்கும் வினையோ மிகமிகப் பெரிது. ஆகவே, இப்பிறப்பில் சில வினைகளை அனுபவிப்பதை வைத்து அடுத்த பிறப்பிற்கு வினை யில்லாது போகுமே என்று நீ கவலை கொள்ளத் தேவையில்லை.

மேலும், சில முயற்சிகளைச் செய்தாலன்றி ஒரு வினையை அனுபவித்தல் இயலாது. முன் வினையானது பிராரத்துவமாய் வந்து பயன் தரும் போது அதனை அனுபவித்தற்கு ஏற்ற சில முயற்சிகள் அனுபவிப்பவனிடத்தில் நிகழ்ந்தே தீரும். அம்முயற்சியே புதிய வினையாய் ஆகாமியம் எனப் பெயர்பெற்று அடுத்த பிறப்பிற்குக் காரணமாகும்.

உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம். ஒருவர் தன் சொந்த ஊரிலேயே அரச அலுவலகம் ஒன்றில் பணி புரிந்து வந்தார். அலுவலகத்தில் வேலையில்லாத நேரத்தில் வீட்டுக்கு வந்து விடுவார்; வீட்டில் வேலையில்லாத பொழுது அலுவலகத்திற்குச் சென்று விடுவார். இப்படிக் கவலையில்லாமல் காலத்தைக் கழித்தார்.

திடீரென்று அவருக்கு ஓர் ஆணை வந்தது. அவரை வேறு ஊருக்கு மாற்றியிருப்பதாகவும், உடனே போய்ச் சேரும்படியாகவும் அதில் கூறப்பட்டிருந்தது. சொந்த ஊரில் உள்ள சுகத்தையிழந்து, எங்கேயோ உள்ள அந்த ஊருக்குப் போய் அல்லற்படுவதா? இந்த மாறுதல் ஆணையை மாற்றியே ஆக வேண்டும். அதற்கு என்ன செய்வது என்று தீவிரமாகச் சிந்தித்தார். செயலிலும் இறங்கினார்.

மேலிடத்திற்குச் சென்று, பார்க்க வேண்டியவர்களைப் பார்த்துக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, நல்லதும் தீயதுமாகிய வழிகளில் முயன்று தனது காரியத்தை முடித்தார். 'நீங்கள் கவலையின்றி ஊருக்குச் செல்லுங்கள். மாறுதல் பற்றிய மறு ஆணை உங்களைத் தேடி வரும்' என்று கூறி அவரை அனுப்பி வைத்தார்கள்.

சில நாட்களில் அந்த ஆணையும் வந்தது. அதில் எழுதியிருந்ததைப் பார்த்ததும் பாவம்! மனிதர் இடிந்துபோய் விட்டார். அப்படி அதில் எழுதியிருந்த செய்திதான் என்ன? முதலில் மாற்றியிருந்த ஊருக்கும் அப்பால் நெடுந்தொலைவிலுள்ள ஓர் ஊருக்கு அவரை மாற்றியிருப்பதாக அந்தச் செய்தி கூறியது.

அவரைச் சொந்த ஊரில் இருக்கவிடாமல் ஊழ் துரத்தியது. அந்த வினை வந்து பயன்தரும் போது அதை மாற்றுவதற்கு அவர் எப்படியெல்லாம் முயற்சி செய்தார். நல்லனவும் தீயனவுமாக அவர் செய்த முயற்சிகளே புதிய வினைகளாக ஏறின. இவ்வாறு ஒரு பிராரத்த வினையை அனுபவிக்கும் போதே மேற்கொண்டு பல புதிய வினைகளை ஆன்மா தேடிக்கொள்ளும்.

**வினைப்பயன் வருதற்கு வாயில்கள்**

**169. ஊழ்வினை தன் பயனை நேர் நின்று தருவதில்லை; ஏதேனும் ஒன்றை வாயிலாகக் கொண்டு அதன் வழியாகவே தன் பயனைக் கொடுக்கும் என்பர். அவ்வாறு வினைப்பயன் வருவதற்கு வாயில்களாய் அமைவன யாவை?**

ஊழ்வினைப் பயனாய் நமக்கு வரக் கூடிய துன்பங்கள் எவற்றை வாயிலாகக் கொண்டு வரும் என்பது பற்றி நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

ஊழ்வினையாகிய பிராரத்த கன்மம், அவ்வாயில்கள் பற்றி மூன்று வகைப்படும். அவை ஆதியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பனவாம்.

அவற்றுள், தன்னாலும் பிறராலும், பிற உயிர்களாலும் வருவன ஆதியான்மிகம். இதனைப் பின்வருமாறு விளக்கிக் காட்டலாம்.

ஒருவரது ஊழ்வினை அவரையே வாயிலாகக் கொண்டு அவருக்குத் துன்பம் விளைவித்தல் உண்டு. அவரது ஊழ்வினை வேறு எங்கேயோ இல்லை. அவரது புத்தியில் தான் பற்றி நிற்கிறது. இக்கட்டான ஒரு சூழலில், அவர் சரியானதொரு முடிவை எடுக்க வேண்டிய தருணத்தில், புத்தியில் உள்ள அவரது வினை புத்தியைத் தவறான பாதையில் செலுத்தித் தவறான முடிவை எடுக்கும்படி செய்துவிடும். அதன் பயனாக அவருக்குப் பெருந்துன்பம் வந்து சேரும். இத்துன்பம் வருவதற்குப் பிறர் யாரும் காரணர் அல்லர். பிராரத்தம் அவர் அவரையே வாயிலாகக் கொண்டு அவரவருக்கு இவ்வாறு துன்பம் தருதல் உண்டு.

இனி, பிறரை வாயிலாகக் கொண்டு வினைத் துன்பங்கள் வந்து வருத்தும் என்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மை. இதற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறுவோம்.

அரசுத் துறையில் அதிகாரியாகப் பணிபுரிகின்ற ஒருவர் சொந்தமாக ஒரு தொழிற்சாலை தொடங்கி நடத்தலாம் என்று முடிவு செய்தார். அவர் அரசுத் துறையைச் சேர்ந்தவர் என்பதால் அவர் பெயரால் அந்த நிறுவனத்தைப் பதிவு செய்ய முடியாது. ஆகையால் தன்னோடு கல்லூரியில் படித்த பழைய நண்பன் ஒருவனை அழைத்து வந்து அவனது பெயரால் அந்த நிறுவனத்தைப் பதிவு செய்து அவனைத் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நண்பன் கூர்மையான மதி உடையவன்; ஆனால் நம்பியவரை வஞ்சித்துக் கெடுதல் செய்வதற்கே தன் அறிவைப் பயன்படுத்தக் கூடியவன். அவனது இந்த இயல்பை பாவம், அவர் அறியார்.

மிகக் குறுகிய காலத்தில் அந்தத் தொழில் நிறுவனம் நல்ல வருவாயை ஈட்டித் தந்தது. அந்த அதிகாரிக்கு ஒரே மகிழ்ச்சி. வந்த வருவாயில் ஒரு பகுதியைத் தன் நண்பனுக்கு உரிய பங்காகக் கொடுத்தார்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த நண்பனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'இந்த நிறுவனம் முற்றிலும் எனக்கே சொந்தமானது. உங்களுக்கு இந்த நிறுவனத்தோடு எந்தத் தொடர்பும் கிடையாது. ஆகையால் இனிமேல் இங்கே வர வேண்டாம்' என்று எழுதப்பட்டிருந்தது.

அதைப் படித்ததும் வானமே இடிந்து தலை மீது விழுந்தாற் போன்ற நிலையை அடைந்தார். அவரால் என்ன செய்ய முடியும்? அந்த நண்பன் பேரில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தை எப்படி மீட்க முடியும்? தீராத கவலையில் அழுந்தினார் அவர்.

ஊழ்வினை பிறரை வாயிலாகக் கொண்டு துன்பத்தைத் தரும் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இது போன்ற எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

ஊழ்வினை தன் பயனைத் தருதற்குப் பிறரை வாயிலாகக் கொள்ளுதல் உண்டு என்று கூறும் போது, பிறர் என்பதில் தம் மனைவி மக்களும் அடங்குவர். அவர்களைக் கருவியாகக் கொண்டு பிராரத்த வினை அவர்கள் மூலமாகத் துன்பங்களைத் தரும் என்பது அனுபவப்பட்டவர்களுக்குத் தெரிந்த உண்மை.

இனி ஊழ்வினை முற்கூறியபடி உயிராகிய தன்னைவாயி லாகக் கொண்டும், பிறரை வாயிலாகக் கொண்டும் வருதலோடு, அஃறிணை உயிர்களாகிய பாம்பு உள்ளிட்ட நச்சுப்பூச்சிகள், விலங்குகள் முதலியவற்றின் வழியாகவும் வந்து துன்பத்தைத் தரும்.

இவ்வாறு தன்னாலும், பிறராலும் பிற உயிர்களாலும் வருவன அதியான்மிகம் எனப் பெயர் பெறும். இன்னும் சுருக்கமாக, உயிர்கள் மூலமாக வருவனவே ஆதியான்மிகம் என்று சொல்லிவிடலாம்.

இனி ஆதிபௌதிகமாவது, புயல், பெருமழை, வெள்ளப் பெருக்கு, இடிவீழ்தல், தீப்பிடித்தல், நிலநடுக்கம் ஏற்படுதல் முதலிய பூதச் செயல்களால் வருவன.

முதலிற் கூறிய ஆதியான்மிகம் சித்துப் பொருளாகிய உயிர்களால் வருவன எனவும், ஆதி பௌதிகமாகிய இது சடப்பொருள்களின் வழியாக வருவது எனவும் உணர்ந்து கொள்க.

இனி ஆதிதைவிகமாவது பேய், பூதம், எமன், எமதூதர், தீய தெய்வங்கள் முதலியவற்றால் வருவன.

ஞானசம்பந்தப் பெருமான் கோளறு பதிகத்துள் கோளும் நாளும் பிறவும் அடியார்களை நலியா என்பதைப் பாடல்தோறும் வலியுறுத்தி வரும்போது இடையில் வினைப்பயன் வருதற்கு வாயில்களாகிய அம்மூன்றினையும் பெயர் குறிப்பிடாமல் எடுத்துக் காட்டுக் களாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

'கோளரி உழுவையோடு கொலை யானை
கேழல் கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே' (செ.6)

என்ற அடிகளில் ஆதியான்மிக வினைகளையும்,

'உரும் இடியும் மின்னும் மிகையான
பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரரவர்க்கு மிகவே' (செ.5)

என்ற அடிகளில் ஆதிபௌதிக வினைகளையும்,

'கொதியுறு காலன் அங்கி நமனோடு
தூதர் கொடு நோய்களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவரவர்க்கு மிகவே' (செ.4)

என்ற அடிகளில் ஆதி தைவிக வினைகளையும் குறித்துள்ள முறைமை அறிந்து மகிழ்தற்குரியது.

**கன்மத் தொடர்ச்சி**

**170. கன்மம் நீரோட்டம் போன்றது என்கிறார்கள் அதன் பொருள் என்ன?**

ஆற்றில் ஓடும் வெள்ளம் ஒரு நொடி கூட நில்லாமல் தொடர்ந்து ஓடிக் கொண்டேயிருக்கிறது. அந்நீரோட்டத்தில் குறிப்பிட்ட ஓரிடத்தை நாம் உற்றுப் பார்த்தால் முந்திய நொடியில் பார்த்த நீர் அந்த நொடியில் அங்கேயில்லை; ஓடிச் சென்று விடுகிறது. ஆயின் அக்கணமே புதிய நீர் வந்து அவ்விடத்தை நிரப்பி விடுகிறது.

இவ்வாறு பழைய நீர் ஓடி விடப் புதிய நீர் இடையறாது தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பதனால் ஆற்றில் வெள்ளம் இருந்து கொண்டேயிருக்கிறது.

அதுபோல, ஒரு வினையை அனுபவித்துக் கழிக்கும் போதே அவ்வினையை அனுபவிக்கும் முயற்சியினால் வேறு புதிய வினைகள் தோன்றி விடுகின்றன. ஒரு வினையின் அழிவில் மற்றும் பல வினைகள் தோன்றுதல் என்னும் இம்முறையில் வினையானது தொடர்ந்து முடிவின்றி இருந்து கொண்டே இருக்கிறது. கன்மத்தின் இந்தத் தொடர்ச்சியைக் கருதியே கன்மம் நீரோட்டம் போன்றது என்று கூறுகின்றார்கள்.

**வினையினின்றும் நீங்குதற்கு வழி**

**171. ஒரு வினையை நுகர்ந்து கழிக்கும் போது அதன் அழிவில் வேறு புதிய வினைகள் தோன்றும் எனவும், இப்படியாக வினை, நாசத்தில் உற்பத்தியாய்த் தொடர்ந்து முடிவின்றி வந்து கொண்டேயிருக்கும் எனவும் கூறினீர்கள். நீங்கள் கூறுவதை வைத்துப் பார்த்தால்**

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினைத் தொடர்பினின்றும் உயிர்கள் நீங்குவதற்கு வழியேயில்லையோ? என்ற கலக்கம் தான் ஏற்படுகிறது. வினை நாசோற்பத்தியாகாமல் கழிவதற்கு ஏதேனும் வழியுண்டா?**

வழியில்லாமற் போகவில்லை. பிராரத்த வினையை அனுபவிக்கும் போது ஆகாமிய வினைகள் தோன்றிவிடும் என்பது உண்மையே. ஆயினும், ஆகாமியம் ஏறாமலும் பிராரத்த வினையை அனுபவித்தல் கூடும்.

அஃது எவ்வாறு என்பதைக் கூறுவோம்.

பிராரத்த வினை தன் பயனை நேரே வந்து தருவதில்லை; பிறரையோ பிற பொருள்களையோ வாயிலாகக்கொண்டே பயன் தரும் என்று சற்று முன்னே கூறினோம்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் தலைமைப் பதவிக்கு நேர் காணல் நடைபெற்றது. அங்கே பணியாற்றுகிற, பணி முதிர்ச்சி உடைய ஒருவரும், அவருக்கு அடுத்த நிலையில் உள்ள மற்றொருவரும், மற்றும் வெளியிலிருந்து சிலரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அந் நேர் காணலில், அங்கேயே பணியாற்றுகிற இரண்டாம் நிலையில் உள்ளவருக்கே தலைமைப் பதவி கிடைத்தது. அவரைக் காட்டிலும் பணி மூப்பு உடையவராய் இருந்தும் கிடைக்காமற் போனவருக்கு அதனால் சொல்லொணா ஆத்திரம் உண்டாயிற்று.

முறைப்படி அப்பதவி தனக்கே கிடைத்திருக்க வேண்டும். அடுத்த நிலையில் உள்ளவர் தான் புகுந்து தனக்கு இக் கெடுதலைச் செய்து விட்டார். அவரைச் சும்மா விடக் கூடாது. அவருக்குத் தீராத தொல்லை கொடுத்து அவரே விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு இங்கிருந்து ஓடும்படியாகச் செய்ய வேண்டும். இப்படியெல்லாம் வெறுப்புணர்ச்சியும், பழி வாங்கும் எண்ணமும் அவர் மனத்தில் எழுந்தன.

அன்று முதல் அவரைப் பகைவராகவே பார்த்தார்; எப்பொழுது வாய்ப்புக் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் அவரை வன்சொற்களால் வாய்க்கு வந்தவாறு வசை பாடினார் (அவர் இல்லாத பொழுது தான்). மற்றும் பல தகாத செயல்களில் ஈடுபட்டார்; இவ்வாறு தனக்கு வந்த பிராரத்த வினையை அனுபவிக்கும் போது தன் எண்ணம், சொல், செயல்களால் வினையை மேலும் பெருக்கிக் கொண்டார்.

அவரே பக்குவம் உடையவராய் இருந்திருப்பாரானால் அவரது போக்கே வேறு விதமாக அமைந்திருக்கும் அல்லவா? 'எனக்கு இப்பதவி கிடைக்காமற் போனது முற்பிறப்பில் நான் செய்த வினையின் பயன். இதற்கு மனிதர் யாரும் காரணர் அல்லர். என் வினைப் பயன் வருவதற்கு இவர்கள் ஒரு கருவியாய் – வாயிலாய் அமைந்தனரேயன்றி இவர்களே இத் தீமையை எனக்குச் செய்தாரல்லர். வினையால் வந்த அப்பயனை நான் அனுபவித்துத் தான் ஆகவேண்டும். திருவருள் தான் என்னைப் பக்குவப் படுத்துதற்கு இத்துன்பத்தைத் தந்திருக்கிறது. அதன் வழியில் இயைந்து நடப்பது தான் எனக்குக் கடமையாகும்' என்று யாதொரு விருப்பும் வெறுப்பும் இன்றி அமைந்து நடப்பின் பிராரத்த வினை உயிரைத் தாக்கமாட்டாது உடலளவாய் வந்து கழியும். அந்நிலையில் புதிதாய் ஆகாமிய வினை ஏற வழியில்லை. இம்முறையில் உயிர் வினைத் தொடர்பினின்றும் நீங்கும் என்று அறிவாயாக.

**முன்னே வந்தது வினையா? உடலா?**

**172. உடல் வருவதற்கு வினை காரணம் என்பதும், வினை வருவதற்கு உடல் காரணம் என்பதும் தெரிகிறது. அங்ஙனமாயின், முதலில் உயிரைப் பொருந்தியது வினையா? அல்லது உடலா? வினை, உடல் என்ற இவற்றுள் எது முந்தியது?**

உயிர் ஆணவ மலத்துள் கட்டுண்டு கிடந்த அநாதி கேவல நிலையில் உயிருக்கு எந்த உடலும் இல்லை. ஆணவ மலம் உயிரின் அறிவு, இச்சை, செயல்களை முழுதுமாக மறைத்து நிற்பதால் நிகழ்வதற்கு இடமில்லை.

அந்த நிலையில் இறைவன் உயிர்களை மலப்பிணிப்பினின்றும் விடுவித்தல் வேண்டும் என்னும் கருணை மேலீட்டால் உயிர்களுக்கு முதன்முதலில் மாயையினின்றும் நுண்ணுடலைப் படைத்துக் கொடுக்கின்றான்.

நுண்ணுடல் ஆகிய சூக்கும தேகம் வினை காரணமாக அமையாமல், இறைவனின் அருள் காரணமாக அமைந்தது ஆகலின் அஃது எல்லாவுயிர்களுக்கும் ஒன்று போலவே கொடுக்கப்பட்டுள்ளது.

பருவுடம்பில் தான் மக்கள், விலங்கு, பறவை, தாவரம் முதலிய வேறுபாடுகள் உள்ளன. இறைவன் முதற்கண் கூட்டுவிக்கும் நுண்ணுடலில் இவ்வேறுபாடுகள் இல்லை. எந்தவித ஏற்றத் தாழ்வும் இல்லை.

நுண்ணுடம்பினால் உயிர்கள் சிறிது அறிவும் இச்சையும் செயலும் விளங்கப் பெறுகின்றன. நுண்ணுடம்பில் உள்ள மனத்தின் கண் விருப்பு வெறுப்புகள் நுண்ணியவாய் நிகழ்கின்றன.

உயிர்கள் ஒவ்வொன்றும் தனித் தன்மையுடையவை; அறிவு நிலையில் தம்முள் வேறுபட்டவை. அறிவு நிலையில் இயல்பாக அமைந்துள்ள அவ்வேறுபாட்டிற்கேற்பவே ஆணவமல மறைப்பும் வெவ்வேறு வகையில் அமைந்திருக்கும். அவ்வவ்வுயிரின் தனித் தன்மைக்கு ஏற்பவும், மல மறைப்பின் வேறுபாட்டிற்கு ஏற்பவும், நுண்ணுடம்பில் உள்ள மனத்தில் விருப்பு வெறுப்புக்கள் வெவ்வேறு வகையில் நிகழும்.

எவ்விடத்தும் நிறைந்தவனாய், எல்லாவற்றையும் அறிபவனாய் உள்ள இறைவன் தெளிவு பெறாமல் நுண்ணியவாய் நிகழும் அவ்விருப்பு வெறுப்புக்களை அறிந்து,அவற்றிற்கு ஏற்றவாறு வெவ்வேறு வகையாய் அமைந்த பருவுடல்களைப் பின்னர் படைத்துக் கொடுக்கின்றான்.

இங்ஙனம் கொடுத்த தூல சரீரமாகிய பருவுடல்களைக் கொண்டு உயிர்கள் தூல வினைகளைச் செய்ய, அவ்வினைகளால் பின்னர் உடல்களும், அவ்வுடல்களால் வினைகளும் மாறி மாறித் தொடர்கின்றன.

இவ்வாறு இறைவன் உயிருக்கு முதலில் சூக்கும உடலைத் தந்து அதன் கண் உள்ள மனத்தில் தோன்றும் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அதற்கேற்பத் தூல உடலைத் தந்து இருவினைகளைப் புரியும்படி செய்கின்றான்.ஆதலால் உடலே வினைக்கு முந்தியது என்பது தெளிவாகும்.

வளரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை. ஏழைகள், எளியவர்கள், ஏதிலிகள் எதுவுமே செய்யமுடியாத இக்கட்டான நிலையில் இதயங்கனிந்து இறைவனை வேண்டினால் அவன் இரங்கி அருள்வான். இறங்கி வந்தருள்வான். என்பதே பிட்டுக்குச் செம்மனச்செல்வி கொடுக்கும் "போதனைப்பிட்டு, சாதனைப்பிட்டு" என்பதை அழகு தமிழில் எழுதுகிறார் கட்டுரையாளர்.**

# செம்மனச் செல்வி

- மு. நா. நடராசா

"தூங்கிய துவசவாயில் தடமதில் இடித்துத் தள்ளி
ஆங்கெழில் மதுரை மூதூர் அழிப்பது போல"
வைகை நதி அணையுடைத்துப் பாய்ந்தது.

அழிவு - அழிவு; மதுரை மாநகர் முன் எப்போதுமே கண்டிராத பேரழிவு.

மதுரையுளோர் பயந்து நடுங்கினர். செய்வதறியாது திகைத்தனர்.

மன்னன் அரிமர்த்தனன் தன் அமைச்சர்களை அழைத்தான்–

"நடந்ததென்ன? மதுரைமாநகரைத் தன் உயிர்போலக் காத்து வளர்க்கும் வைகையாள் ஏன் இப்படிச் சினந்து சீறுகிறாள்?

ஆலவாய் அப்பனின் கருமங்களில் ஆகம விதிமுறைகள் ஏதும் பிழைத்தனவா?

தவமுடைய பெரியோரின் மனம் நோகும் படியாக நாம் நடந்து கொண்டோமா?

நீதி நெறிமுறைகளில் நின்று சற்றும் விலகாத மாந்தற்கு ஏதும் தீங்கேற்பட்டதா?

கற்புடைய மாதர் கலக்கமுற்றனரா? சொல்லுங்கள் அமைச்சர்" என்றான்.

"உங்களது ஆட்சியில் - இவை நடக்குமா? நடக்காது; நடக்கவே முடியாது மன்னா.

இ.....ரு.....ந்.....து.....ம்...

மதுரை சொக்கநாதப் பெருமானில் அளவற்ற பக்தி பூண்டவரும்; தங்களினால் தென்னவன் பிரமராயரெனும் சிறப்பு விருது பெற்றவரும்; சகல கலைகளிலும் துறை தோய்ந்தவருமான எம் முதலமைச்சர் திருவாதவூரரை....

மந்திரியார் நிறத்தவில்லை.

மன்னன் குறுக்கிட்டான்

"என்னுளம் எதை நினைத்ததோ அதையே நீங்களும் சொல்கிறீர்கள்"

திருவாதவூரர் விடுவிக்கப்படுகிறார்.

வைகையின் சிதைந்த அணைகள் சீர் செய்யப்பட வேண்டும்; உயர்த்தப்பட வேண்டும்.

சேவகர் ஓடினர் வைகைக் கரைக்கு.

அளவுகோலால் அளந்து கூறுகளாகக் கரையைப் பிரித்தனர். ஒவ்வொரு கூறிற்கும் மதுரை மாந்தரின் பெயர் குறித்தனர்.

அதில் ஒரு கூறினை அடைக்க வேண்டியவள்–

பிட்டு விற்பவள் ;

மலக்கட்டறுத்தவள்;

பந்தபாசங்கள் விட்டகன்றவள்;

ஆலவாயனில் அன்புமிக்கவள், அவள் –

செம்மனச் செல்வி எனும் பெயருடைய நரை மூதாட்டி

வயது முதிர்ந்தவள். எப்படி அணைகட்ட முடியும்?

கூலியாளைத் தேடினாள்; கிடைப்பதாக இல்லை.

ஏனையோரின் பங்குகள் அணைகட்டப்பட்டு

கிழவியின் பங்கு அடைக்கப்படாமல்கிடந்தது.

எனக்கு மாதாவும் இல்லை பிதாவுமில்லை;

சுற்றம் உறவு என்று எவருமே இல்லை;

கூலியாள் என்று யாரும் கிடைப்பாருமில்லை.

நான் என்ன செய்வேன்?

அரச ஆணையை மீறிய குற்றத்திற்கு நான் ஆளாவதா?

ஆலவாய் அப்பனே –

அல்லும் பகலும் உனையே நினைந்து, உன்பாதக் கமலங்களே தஞ்சமெனக் கருதிக் கசிந்துருகும் அடியார் துயர் துடைப்பவனே. சோமசுந்தரனே.

என்போன்ற ஏதிலிகளின் கண்ணீரைப் பார்ப்பது உன் பொழுது போக்காகிவிட்டதா?" என்று "மட்டறத் தளர்ந்த கொங்கை மார்பினிற் கண்ணீர் வர" அழுது அரற்றினாள் கிழவி. கேட்டது அவனுக்கு.

கூலியாள் வந்தான் – இடுப்பிலே கந்தை வஸ்திரம்; தலைமேலே மண்ணை வெட்டிப் போடுவதற்கான கூடை; தோழிலே மண் வெட்டி; வாயிலே "என்னைக் கூலியாளாக அமர்த்துவதற்கு இங்கு யாராவது இருக்கிறீர்களா?" என்னும் வார்த்தைகள்.

வந்தியின் முன்வந்தான்.

புந்தியில் மகிழ்ந்தவள்.

"மைந்த நீ எனக்கிங்கு ஆளாய் வா" எனக்கூற, "முன்னர் கூலி தந்தியேல் வருவன்" என்றான். எப்படி இருக்கிறது?

வேலை செய்வதற்கு முன்பாகவே கூலியைத் தரும்படி கேட்கிறான்.

விசித்திரமான கூலியாள்.

குறித்த வேலையைத் திருப்தியாக நிறைவேற்றியதன் பின்பே வேலைக்கேற்ப கூலிபெறுவதே வழமை. இங்கே – வேலை தொடங்கு முன்பாகவே கூலி கேட்கின்ற கூலியாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ முதலிலே கூலி தரவேண்டுமென்கிறாய், இப்போ கூலி தர என்னிடம் பணம் இல்லை உனக்கு உடன்பாடெனில் –

"இந்த ஆரமுதம் போலும் இனிய பிட்டளிப்பேன். அல்லால் அந்திவா இதனை விற்று அளிப்பன் நின் கூலி" என்று கூறினாள்; வந்தியாகிய செம்மனச் செல்வி.

"தாயே எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது நீ பிட்டு இப்ப தருவதாகக் கூறுகின்றாய். பிட்டினைக் கூலியாகத் தருவாயெனில் உனக்கு அளந்து விடப்பட்டிருக்கும் பங்கினைச் சில நொடிகளில் நான் அடைத்துவிடுவேன்" என்று கூறி தன் தோளிற் கிடந்த கரிய வஸ்திரமொன்றை எடுத்துத் தன் கரங்களில் விரித்து நீட்ட; தாயன்பு நிறை மனத்துடன் "மகனே, நீ இதை உண்பாய்" எனக்கூறிப் பிட்டினைத் தன் கரத்தால் அள்ளி அதன்மேலிட்டாள்.

அதை உண்ட கூலியாள்.
"முன்பொருமுறை வேடனிட்டமென் தசையை விடவும் இது நன்றாக இருக்கிறது;" என்று கூறியபடி வைகைக் கரையடைந்து கிழவியை நோக்கி "குன்றெனும் தவத்தாய் உந்தன் கோலறை காட்டுக" என்றான். இடத்தினைக் காட்டினாள் வந்தி.

அணைகட்டத் தொடங்கினான் கூலியாள். மண்ணினை வெட்டுவான், கூடையிற் கொட்டுவான், பிட்டு நன்றென்று கூறிக் கைகளைத் தட்டுவான். ஆடுவான் பாடுவான். ஓடிச் செல்வான். கூடைமண்ணினை வைகையின் கரைதனில் சிந்துவான். வேலை மிகுதியாற் சோர்வுற்றவன்போல் மர நிழலில் இளைப்பாறுவான்.
வந்தி இவன் செய்கையைப் பார்த்தாள்.

கூலிபெற்றுக் கொண்டவன் வேலையைச் சரியாகச் செய்ய வில்லையே எனச் சினக்கவில்லை; வேலையைச் செய்யும்படி கேட்கவும் இல்லை. ஆனால், மனம் வருந்தினாள் வந்தி.

அரச சேவகர்கள் வந்தார்களெனில் இவன் செயல்கண்டு கோபம் கொள்வார்களே. தண்டனை கொடுப்பார்களே, என எண்ணி வருந்தினாள் வந்தி.

வந்தியின் மனதறிந்த கூலியாள்.
"உற்றயிக் கரையை அன்னே ஒல்லையில் அடைப்பேன்.
சற்றிதற்கு இரங்காது ஏகு உன் தகவுடை மனைக்கு" என்றான்.
தன் தகவுடை மனையை வந்தியடைந்தாள்.

கூலியாள்....?
கூத்தாடுபவர்.
வைகை நற் கரைதனில் நடந்தது கூத்து.
வந்தி நினைத்ததே அங்கு நிகழ்ந்தது.
பாண்டியன் சேவகன் ஓங்கினான் பிரம்பினை.
அம்பிகை பாகத்தில் அடிபடக்கூடாது.
தாயிற் சிறந்தவர் கொடுத்தார் வலப்புறம்.
அடித்தான் சேவகன் – கூலியாள் மறைந்தார்.
அடி – அண்டசராசரங்கள் அனைத்திலும் பட்டது.
கூலியாள் யாரென அனைவரும் உணர்ந்தனர்.

கூலியாள் கூறியதற்கிணங்க தன் மனையையடைந்த செம்மனச்செல்வி, எனது கூலியாள் என் செய்தானோ? அவனது செயல் கண்டு சேவகர்கள் தண்டிப்பார்களோ? அவனுக்குத் தீங்கிழைப்பரோ? எனும் சிந்தனையில் துயருற்றிருந்தாள்.
அவ்வேளை –

அவளின் செவிகளில் வேத வாக்கியங்கள் ஒலித்தன. துந்துபிகள் முழங்கின. விண்ணினின்று பூ மாரி பொழிந்தது. சிவகணங்கள் வந்து "அன்னையே ஏறுங்கள்" எனக்கூறி தேவவிமானத்தில் ஏற்றிச் சென்றனர்.

*"ஆங்கது தன்னில் அடியவட்காகப்*
*பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்"* என்றும்

*"பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே"* என்றும்; முறையே கீர்த்தித்திரு அகவலிலும்; திருக்கழுக் குன்றுப் பதிகத்திலும் மாணிக்கவாசகசுவாமிகள் கூறுவதும்,

மாலையிற் கூலிபெறுவதெனிற் பிட்டு விற்றுத்தீர்ந்து விடும்; ஆகவே "முன்னர் கூலி தந்தியேல் வருவேன்" எனக் கூலியாள் கூறியதாக வரும் திருவாதவூரடிகள் புராணத்தின் கடவுள்மா முனிவரின் கூற்றும். மண்சுமந்த சிவபெருமானது திருவிளை யாடல்; ஏழை எளியவர்களாக, எதுவுமே அற்ற எதிலிகளாக இருந்தாலும்; இறைவனை நம்பினால் அவர்களது நிலைக்கு இறங்கி வந்து இறைவன் உதவுவார் – ஆட்கொள்வார் என்பதை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. செம்மனச் செல்வியாரின் வாழ்வு இதையே உணர்த்துகிறது.

## இந்துசாதனம் – சந்தா விபரம்

**உள்நாடு**
தனிப்பிரதி : 50/–
ஆண்டுச் சந்தா : ரூபா 600/–

**வெளிநாடு**

| | | |
|---|---|---|
| Australia (AU$) | - | 35 |
| Europe | - | 25 |
| India ( Indian Rs) | - | 500 |
| Malaysia (RM) | - | 50 |
| Canada ($) | - | 35 |
| UK (£) | - | 15 |
| Olher (US$) | - | 25 |

**காசோலைகள்**
Saiva Paripalana Sabai
Account No. 1090946
என்று எழுதப்பெறுதல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
கௌரவ முகாமையாளர்
**இந்துசாதனம்**
இல.66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்
## Hindu Organ
e-mail: editor@hindu organ.com

விகிர்தி ஸு மார்கழி மீ 1ஆம் உ (16.12.2010)

# அணுவாயுதம் அற்ற உலகம்

அணுவாயுதங்கள் எதுவுமே இல்லாத உலகம் ஒன்று உருவாக வேண்டும். — உருவாக்கப்பட வேண்டும். — இரசாயன ஆயுதங்கள், கொத்துக்குண்டுகள், நிலக்கண்ணி வெடிகள் முதலியவை ஏற்கெனவே தடைசெய்யப்பட்டிருத்தல் போல —

அணு ஆயுதங்களும் சட்ட விரோதமானவை என அறிவிக்கப்பட வேண்டும் —

அவற்றைத் தயாரிப்பது நிறுத்தப்பட வேண்டும் —

ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு இன்றுவரை எஞ்சி இருப்பவை யாவும் அழிக்கப்பட வேண்டும் —

பல்வேறு ஆராய்ச்சிகளையும் அழிவுகளையும் நோக்கி அசுர வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் இன்றைய உலகத்தையும் அந்த அவலங்களிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை உள்ளடக்கிக் கொண்ட இந்தத் தீர்மானத்தை —

ஒரு மனதாக நிறைவேற்றியவர்கள் — அடுத்த தேர்தலையும் அதிலே தமக்கும் தம்மவர்க்கும் இருக்கக்கூடிய வெற்றி வாய்ப்புக்களைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்கத் தெரியாத — சிந்திக்க விரும்பாத — சிந்திக்க முடியாத ...

மூன்றாந்தர அரசியல் வாதிகள் அல்லர் —

மனித சமூகத்தின் நீடித்த வாழ்வுக்காகவும் நிரந்தர சமாதானத்திற்காகவும் அர்ப்பணிப்பு நிறைந்த ஆக்கபூர்வமான சிந்தனை — செயல் — செயற்பாடு காரணமாக —

உலகில் அதி உயர்ந்த கௌரவப் பரிசாகக் கணிக்கப்படுகின்ற —

நோபல் பரிசைப் பெற்ற — திபெத்திய ஆன்மீகக் குரு தலாய் லாமா, நிறவெறிக் கொடுமையை ஒழிக்க வேண்டும் எனப் போராடிய பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் பிரெடரிக் வில்லியம் டி கிளார்க், மியன்மாரில் ஜனநாயகத்துக்காகப் போராடி இராணுவ அடக்குமுறைக்கு ஆளான ஆங் சான் சூகி முதலியோர்!

முதன் முதலில் யுத்த இடத்தில் அணுகுண்டு வீசப்பட்டு அழிவுகள், பேரிழப்புகள், துயரங்கள், அழிவுகளைக் கண்டிருந்த நாள் வரை இன்னல்களைச் சந்தித்துக்கொண்டிருப்போர் —

கொல்லப்பட்டும் குற்றுயிராக்கப்பட்டும், அங்கவீனராக்கப்பட்டும் காலங்காலமாக அடங்காத — முடிவுறாத வலிகளுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு நடைப் பிணங்களாக ஆக்கப்பட்டவர்களின் —

அந்த இடத்தில் — ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமாவிலே ஒன்றுகூடி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர் அவர்கள்!

இத்தகைய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குரிய தகுதியும் தலைமையும் தாராளமாகப் பெற்றிருக்கிற இவர்கள் —

இதை நடைமுறைப்படுத்துவதற்குரிய திட்டங்களையும் வகுத்திருக்கின்றார்களா என்பதும் —

அணுகுண்டுப் போட்டியிலும் அதிகாரப் போட்டியிலும் ஈடுபட்டுக் கொண்டு தமக்கிடையே மோதிக்கொண்டிருக்கும் வல்லரசுகளும் — வல்லரசாகத் தம்மைக் கருதிக்கொண்டிருக்கும் அரசுகளும் — வல்லரசாக வர முயலும் அரசுகளும் — மனப்பூர்வமாகத் தம் ஒத்துழைப்பினை வழங்குமா என்பதும் —

மாறாக —
"இந்தத் தீர்மானத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்போம்" என்ற வீம்புடன் செயற்படத் தொடங்குமா என்பதும் —

தெளிவாகத் தெரியவில்லை!

ஆனாலும் —

நாட்டின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டோர் — உலகின் உயர்வில் உள்ளத்தைப் பதித்தோர் — அடுத்தவர் நன்றாக வாழ்ந்தால் மட்டுமே அடியேனும் நன்றாக வாழ முடியும் என மெய்யாகவே நம்புவோர் ஒன்றுகூடியதும் —

இது யாரோ நிறைவேற்றிய தீர்மானம் எனப் புறக்கணிக்காமல் —

இது நாமே நிறைவேற்றிய தீர்மானம் — ஆகவே இதை நடைமுறைப்படுத்த வேண்டிய முதற் பொறுப்பும் முக்கிய பொறுப்பும் எமக்கே உண்டு என்ற 'பொதுநல' அடிப்படையிலும் —

எதிர்கால உலகம் என்பது யாரோ இனந்தெரியாதவர்களின் உலகம் அன்று — என் பிள்ளைகளின் உலகம் அது — அந்தப் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் உலகம் அது — அத்தகைய — அபாயமான அழிவிலிருந்து என் சந்ததியினரைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு எனக்கு உண்டு என்ற 'சுயநல' அடிப்படையிலும் —

சிந்தித்துச் செயற்பட்டால் — தனித்தும் சேர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் —

அணுவாயுதத்தின் அச்சுறுத்தல் இல்லாத உலகம் என்பது இன்றோ நாளையோ சாத்தியப்படாவிட்டாலும் நாளை மறு நாளோ அதற்கு அடுத்த நாளோ சாத்தியமாகும் என்பது சர்வ நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

இந்து சாதனம் 2010 புரட்டாதி இதழில் "சிறுதெய்வ வழிபாடா?" என்ற தலைப்பில் இடம்பெற்ற குறிப்புச் சம்பந்தமாக, சைவ சித்தாந்தத்தையும், நாவலர் அவர்களின் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ள தன் விளக்கங்களை வெளியிடுகின்றார் முதறிஞரும், ஓய்வுநிலை அதிபருமான திரு. ஆ. சபாரத்தினம்.

# தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி...

முதறிஞர் திரு. ஆ. சபாரத்தினம்

சைவத் தமிழ் மக்கள் வேத சிவாகமங்களையும், அவை வழிவந்த தோத்திர சாத்திரங்களையும் முதனூலாகக் கொள்பவர்கள். மனிதர் மனம், புத்தி, சித்தம், அங்காரம் ஆகிய உட்கருவிகளின் விருத்திக்கு ஏற்றபடி, தாமு இறை, உயிர், தளை பற்றிய கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்றனர். முதனூல்களிலே குறிப்பிட்ட வழிபாடு கற்றோரால் விரும்பி வழங்கப்படுகிறது. மற்றையோர் தம்முடைய வழிபாடுகளைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள்.

நாவலர் பெருமான் முதனூல்களை அனுசரித்து ஆகம வழிபாட்டை வற்புறுத்தினார். ஆகமத்துக்கு மாறான வழிபாட்டு முறைகளைச் சைவநெறியினர் பின்பற்றுவதைக் குறைகூறினார். வேதாகம பூசை முறையைப் கிராம மக்களின் மரபு வழிபாட்டு முறையைப் கலந்து குழப்புவதை அவர் மறுத்தார். கிராம தேவதைகளைப் பூசிப்போரைத் தடுக்கவோ அவர்கள் கோவில்களை மாற்றவோ, உடைக்கவோ அவர் மக்களைத் தூண்டவில்லை.

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை; கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்கதக்கார்!"

இறைவனுக்கு ஆட்பட்டு, தம்மை அவனுக்கு அடிமையாக அர்ப்பணித்து, அவன் அருளை யாசிப்பவர்கள் பலதரத்தில் உள்ளனர்; அப்பெருமானின் பெருமையோ அளவில்லாதது; சொல்லி முடியாதது. ஏற்றுக்கொள்ளக் கூடிய இவை இவற்றைக் கைக்கொண்டால் கொடிய வினைகள் வந்து நம்மை வருத்தமாட்டா; என்ற கருத்துடையவர்களே, நீங்கள் அவன் பாதம்பணிந்து, அவன் சந்நிதியில் நின்று, இங்கு கூறப்படுகின்றவற்றைக் கேளுங்கள். தகுதியுடையவர்களே கேளுங்கள்" என்றார் சம்பந்தப் பெருமான்.

"யாதொருதெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாகனார்தாம் வருவார்" என்கிறது சித்தியார்.

தெய்வ சாந்நித்தியம் தன்னில் உடையவரை வணங்கலாம். நாம் கற்பித்துப் போற்றுபவை, நம் மனத்திருப்திக்கு வணங்குபவை அனைத்துந் தெய்வம் ஆகா.

1952ஆம் ஆண்டு நாரந்தனை கந்தசுவாமி கோவில் கும்பாபிஷேகக் கிரியைகளை முன்னின்று நடத்திவைத்த நயினை சுவாமிநாதக் குருக்கள், இடைநேரத்தில் உரையாடியபோது, மாரி வழிபாடு பற்றிப் பேசவேண்டி வந்தது. "மகா மாரி வைதிகதெய்வமே" என்றார்.

உயர் சைவம் மதம் மாற்றுப் பிரசாரம் அன்று. வேதரிஷி உபதேசம் சென்று வேதமுழக்கம் செய்யவில்லை. ஆரியர்களுக்குப் பிறகே இந்திய மதங்கள் பிறர் மத்தியில் பிரசாரம் செய்யப்பட்டன. அந்த வழியில் தற்கால இந்து மதங்களும் பிறர் மத்தியில் முயன்று பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துள்ளன.

இந்தியாவிற்குள்ளேயே மலைசாதியினரின் மரபுவழி வாழ்க்கையோடு ஒட்டிய நம்பிக்கைகள், மதக் கருத்துகளை இழிந்து பேசியும், மத விரித்தலைப் பரப்பியும் அம் மக்களின் வாழ்வில் திசைப்பிறழ்வை உண்டாக்கிவிட முயல்வோர், மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டோரைத் தம் போட்டியில் வெல்ல வேண்டும் என்று தீவிர முயற்சிசெய்து, மூடநம்பிக்கைகளையும் கெடுத்து, நூறுயாட்டையும் பாழ்செய்து வருகிறார்கள்.

சமூகவியலர் என்ற விஞ்ஞானநெறியினரே, உயர் மதம் கீழோர் மதம் எனப் பாகுபடுத்துவதும், இரண்டுக்கும் முரண்பாட்டைக் கண்டுபிடிப்பதும், உயர்மதத்தவர்கள் சாதாரண மக்களைத் தம் பண்பாட்டிற்கு மாற்றுவதைத் தம் விரதமாகக் கொண்ட, சுபாவம் மிக்கவர்கள் எனக் கொள்கைக்குழுக்களுக்கு இரங்குவதுபோலப் பேசுவதும் எமக்குத் தெரியும். உண்மை. ஸ்ரீநிவாஸ் என்பவர் 'சமஸ்கிருதமயமாதல்' என்ற சொல்லை ஆக்கி, வடமொழி வைதிகக் கூட்டம், சிறுதெய்வ வழிபாட்டுக் குழுக்களை தம் அதிகாரத்துக்குட்படுத்துவதைக் குறிப்பிட்டார். 'சமஸ்கிருதி' என்ற சொல் வடஇந்தியமொழிகளிலும் சிங்களத்திலும் 'பண்பாட்டு மயமாதல்' (acculturation) என்ற கருத்திலும் வழங்குகிறது.

மெக்சிக்கோ நாட்டு இந்திய இனசர் திரௌபதி வழிபாடு பற்றி, தமிழ்நாட்டில், 12 வருட ஆராய்ச்சிக்குப் பின் எழுதிய மூன்று பாக ஆய்வுநூலில் "உயர்மரபு, சிறுமரபு என்ற வேறுபாட்டை மறுத்து திரௌபதி வழிபாட்டைக் கூறும் பஞ்சகன்னிகை, கிராம தேவதை அல்ல" என விளக்குகிறார்.

சைவர்களாகிய நாம் வீடுபேறுக்கு வழிபாடு பற்றி மட்டுமே பேசுவோம். பிறரின் சொந்த விரவழிபாடு முதலியன வாழ்வின் துன்பத்தினின்றும் விடுபட வகை செய்யா என்ற முறையில் அவற்றை அசட்டை செய்யலாம். அவற்றால் உலகியலில் நன்மைகளைப் பெற விரும்புவோர் செய்க. அவை வயிற்றுக் கஞ்சிக்கு வகையற்றவனிடம் கோதுமை மாப்பிட்டு வேண்டுமா? அரிசிச் சோறுவேண்டுமா? என்று கேட்பது போல. அவனை இழிவு செய்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறவாழ்வின் அவசியம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்கு. மகத்தான பிறவியாகிய மானுடப் பிறவியைப் பெற்ற நாம் அதனைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். "கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி" என்ற சித்த புருஷரின் வாக்கிற்கு அமைய மானிடர்களிற் பலர் தாம் எடுத்த பிறவியின் பயனை உணராமல் வாழ்ந்து மடிகிறார்கள். தர்ம நெறி பிசகாமல் வாழ்பவனுடைய வாழ்க்கை என்றும் ஒளிமய மாகவே இருக்கும்.

"ஒவ்வொருவருடைய நாளாந்தச் செயற்பாடும் தெய்விகத் துலாக்கோலில் நிறுக்கப்படுகிறது" என்று கர்மக்கோட்பாடு கூறுகிறது. நாம் நாளாந்தம் செய்கின்ற செயல்கள் ஒவ்வொன்றுக் கும் விளைவு உண்டு. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று பழமொழியும் இதைத்தான் உணர்த்துகிறது. "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" என்றே விஞ்ஞானியான நியூட்டனின் மூன்றாவது இயக்க விதியும் கூறுகிறது. அறிவின் தவறான செயற்பாட்டினால் வாழ்விற் சீரழிந்தவர்கள் பலரைக் காணலாம். "விநாச காலே விபரீத புத்தி" (கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே) என்ற சுலோகமும் இதனை உறுதிப்படுத்துகிறது. அறிவு சரியாகச் செயற்படுவதற்கு அறவாழ்வே வழிகாட்டும் என இந்து சமயம் வலியுறுத்திக் கூறுகின்றது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அனுசரிக்கவேண்டிய தர்மம், சுவதர்மம் எனப்படும். உண்டு, உடுத்து, கண்டு, களித்துக் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழ்வது சுவதர்மம் ஆகாது. "தர்மத்தைக் காத்தவனை அது காக்கும். கொன்றவனை அது கொல்லும்" என்று இந்துக்களின் சட்டநூலாகிய தர்ம சாஸ்திரமும் குறிப்பிடுகிறது. குருகுல கல்வி முறையில் அறத்தின் முக்கியத்துவம் பற்றிக் குரு தனது மாணவனுக்கு விளக்கிக் கூறியுள்ளார். வாழ்வில் அறநெறி தவறுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் குரு மாணவனுக்கு எடுத்துக்கூறினார். ஆனால் இன்று பாடசாலைகள் உயர்கல்விக் கூடங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற் கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் சுவதர்மத்தை உணரக்கூடியதான போதனைகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படுவதில்லை. வெறுமனே வயிறு வளர்க்கும் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கும் போதனைகள் இடம்பெற்று வருகின்றன. தர்மத்தின் வலிமையை மாணவர்களுக்கு உணர்த்தாத கல்விச்சாலைகள் அனைத்தும் ஆரவாரம் பண்ணும் வெறும் சினிமாக் கொட்டகைகளாகவே காணப்படுகின்றன.

அறநெறி பிசகாது வாழ்வதற்கு நல் ஒழுக்கம் இன்றியமை யாதது. சிறப்பான ஒழுக்கத்தையே அறம் என்று கூறலாம். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் அறத்தினைச் செய்தல் வேண்டும். மூன்றும் தூய்மையாக இருந்து செயற்பட்டால்தான் காரிய சித்தி ஏற்படும். "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" என்று தாயுமான சுவாமிகளும் தனது பாடலிற் குறிப்பிடுகின்றார். புறக்கரணங்கள் உட்கரணங்களைச் சுத்தி செய்வதே சுதர்மம். உட் கரணங்களில் மிக விசேடமானது மனம். மனம் சுத்தமானால் எல்லாக் கரணங்களும் சுத்தமாகும். "மனமது சுத்தமானால் மந்திரம் செபிப்பதுண்டோ" என்ற பாடல் வரிகளும் இதனையே உணர்த்துகின்றன. சிந்தனை ஆரோக்கியமானதாக இருந்தால், சொல்லும் செயலும் தூய்மையுடையதாக அமையும். இதனையே "நல்லவை எண்ணல் வேண்டும்" என்று மகாகவி பாரதியாரும் குறிப்பிடுகின்றார்: மனத்திலே எவ்வித குற்றங்களும் தோன்றாமல் அவற்றைக் களைந்துவிட்டால் அதுவே அறமாகும். எண்ணமே சொல்லுக்கும் செயலுக்கும் வித்தாக இருப்பதால் மனத்துக்கண் மாசிலாதிருப்பது அனைத்திற்கும் அடிப்படை என்ற கருத்தையே

*"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்.*
*ஆகுல நீர பிற"*

எனத் திருக்குறளும் கூறுகின்றது.

தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகின்ற பொழுது இறைவனின் அவதாரம் இடம்பெறும் என்பதைக் கிருஷ்ணபரமாத்மா கீதையிலே அருச்சுனனுக்கு எடுத்துக் கூறுகின்றார்.

உ+ம்: (1) பாரதா, எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கின்றேன்.

(2) நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காகவும் தர்மத்தை நிலை நாட்டுவதற்காகவும் யுகம், யுகம் தோறும் அவதாரம் செய்கின்றேன்.

நாட்டிலே தர்மம் தலை கீழாகும்போது அவதார புருஷர்கள் தோன்றுகிறார்கள். அவதார புருஷர்கள் ஈஸ்வரனால் அனுப்பப் படும் மானுட தூதுவர்களாவார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் அனுசரிக்க வேண்டிய அற ஒழுக்க நியதிகளைத் தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் கூறுகின்றன. சகலருக்குமான பொதுவான தர்மம் சனாதன தர்மம் என்றும், ஒவ்வொரு யுகத்திற்குமுரிய தர்மம் யுக தர்மம் என்றும் ஆண்களுக்குரிய தர்மம் புருஷ தர்மம் என்றும் பெண்களுக்குரிய தர்மம் ஸ்திரீ தர்மம் என்றும் அழைக்கப்படும், அரசனுக்குரியது ராஜ தர்மம் என்றால் பிரஜைகளுக்குரியது பிரஜாதர்மம். ஒவ்வொரு வர்ணமும் அனுசரிக்க வேண்டிய தர்மம் வர்ண தர்மம், ஆச்சிரம நெறி நிற்பவன் அனுசரிக்க வேண்டிய தர்மம் ஆச்சிரம தர்மம் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மனிதனும் வாழவேண்டிய நெறிமுறைகளைத் தர்ம சாஸ்திரங்கள் வகுத்துக் கூறினாலும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொருவருக்குள்ளேயும் நின்று இயக்குகின்ற மனச்சாட்சியே தெய்வத்தின் குரலாக ஒலிக்கின்றது எனத் தர்ம சாஸ்திரம்

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. "வேண்டியவைச் சட்ட திட்டங்களுக்காக உள்ளிருந்து கேட்கும் மனச் சான்றின் குரலை அமுக்கிக் கொன்றுவிடலாகாது" என்றும் கூறுகின்றார்.

தருமம் என்று ஒரு பொருள் உள்ளது. ஒருவருக்கு இம்மையிலும் மறுமையிலும் நிலைத்தமான இன்பம் கிடைக்க வேண்டுமானால், அது அந்தத் தருமத்தினாலேதான் உண்டாகும். பூர்வ புண்ணிய பலன்களினால், இம்மையிலே செல்வம் முதலிய சிறப்புகளினால் சான்றோர் இவைகளெல்லாம் இது ஏற்படும் எனச் சுத்தாநாணம் கூறுகிறது.

"தருமம் என்றொரு பொருள் உளது தானிவ்
இருமையின் இன்பமும் எளிதின், ஆக்குமால்
அருமையில் வரும் பொருள், ஆகுமன்னதும்
ஒருமையே உணர்வுடை உள்ளத்தோர்க்கரோ"

அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றாகவே காட்சி தருகிறது. எண்ணம் தருமத்தின் நிலைபெற்ற (Static) ஆற்றலாகும். சொல் இயக்க நிலை (Kinetic) ஆற்றலாம். செயல் இயங்கும் நிலை (Dynamic) ஆற்றலாகும். அறம் காட்சிப் பொருளாக வெளிப்படுவதற்கு கருவியாக இருப்பது செயலாகும். இச்செயல்நிலையே ஒழுக்கமென உலகம் போற்றி வருகிறது. பிறருக்குக் கேடு தருகின்ற தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது. கேடு நினைப்பவனுக்கே கேடு விளையும் என்பது.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு"
எனத் திருக்குறளும் விளக்குகின்றது.

பிறவியின் பிணியிலிருந்து விடுபடுவதற்கான வழிகளைச் சிவஞான சித்தியார் தெளிவாகக் கூறுகிறது. இறைவனை அடைவிக்கும் எழில் ஞான பூசைக்குரிய மார்க்கங்களைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகிறது. ஒழுக்கம் அன்பு அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அறிவோடு அர்ச்சித்தல் ஆதி இருக்கின அறங்கள்.

எவர்க்கும் பிறருக்கும் நன்மை தரும் ஆனந்தம் தரும் செயல்களே ஒழுக்கம் எனப்படும். அறம் உயர்வைத் தருவதால் உயிரினும் மேலாகக் கருதப்படும். அறமே ஆண்டவன் அவனே அறம் வளர்க்கும் நாயகன். அற வாழ்வு வாழ்வோர் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தரும். அறத்தின் வடிவமாக இருக்கும் இறைவனின் திருவடியுடன் ஆன்மா இரண்டறக்கலந்து, அறநெறி பிசகாத வாழ்வு நெறியே துணையாக அமையும்.

## நாவலர் குருபூசைத்தினம்.





யாழ்/ வைமாபாலன சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் 131ஆவது குருபூசை தினத்தையொட்டி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை சிறப்பு நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தினர். சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் ந. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் யாழ்/ இந்து ஆரம்பபாடசாலை அதிபர் திரு.சு. தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சுன்னாகம் நாகேஸ்வரி மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கு. பாலசண்முகன் சிறப்புரை நிகழ்த்தினார். பேச்சுப்போட்டியில் மேற்பிரிவில் முதலாம் பரிசுபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் உமாகரன் அருள்பரன் பிரதம விருந்தினரிடம் இருந்து பரிசைப் பெறுவதையும் காரைநகர் சிவன்கோட்டு கலாமன்றத்தினரின் கலைநிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் தாய்மை தாயன்பு

– நயினை நா. யோகநாதன், B.A.

தாய் என்பது உலகத்திற் காணப்படும் ஒரே ஒரு உன்னதமான புனிதப் படைப்பு. எவள் இல்லை எனில் நாம் இந்த மண்ணிற் பிறந்திருக்கமுடியாதோ; எவளை இழந்து விட்டால் மீண்டும் நாம் பெறமுடியாதோ; அவளே தாய். பூமியில் முதலிற் படைக்கப்பட்ட பெண் தாயாகவே பார்க்கப்பட்டாள். பெண்மையின் பெருமை தாய்மையிற்றான் தங்கி இருக்கின்றது. ஏனென்றால், தாய்மையில்தான் இறைமை தவம் புரிகின்றது. மலையில் இருக்கும் கல்லை யாருமே மதிப்பதில்லை. அது சிற்பியின் கைபட்டுச் சிலையாக வடிக்கப்படும்போது அதற்கு ஒரு மரியாதை பிறக்கின்றது. அந்தச் சிலை கோவிலின் கருவறைக்குள் வைக்கப்படும் போது வணக்கத்திற்குரிய தெய்வமாகிறது. பெண்ணும் ஒரு கல்லைப் போன்றவளே. இல்லற வாழ்க்கையிற்றான் அவள் சிற்பமாகச் செதுக்கப்படுகிறாள். தாயாகும்போதுதான் குடும்பக் கோவிலின் கருவறைக்குள் அவள் கடவுளாக்கப்படு கின்றாள்.

அம்மா ! என்பது தமிழில் ஒரு சொல் மட்டுமே எனப் பலர் நினைக்கின்றார்கள். இல்லை; இல்லை. ஒரே சொல்லில் தமிழில் எழுதப்பட்ட காவியம்தான் அம்மா என்பதை மறந்து விடாதீர்கள். அன்பு, பொறுமை, இரக்கம், கருணை, மன்னிக்கும் சுபாவம், தன்னலம் துறந்த தியாகம், அர்ப்பணிப்பு, ஆனந்த அனுபூதி இவை எல்லாம் சங்கமித்திருக்கும் இனிய கலவையே அம்மா. இவை எல்லாவற்றையும், வெளிப்படுத்தி நிற்கும் ஒரு அற்புதமான காவியமே அம்மா. உண்மையில் அது ஒரு காவியமே.

அம்மா என்ற சொல்லின் ஆழமான, அழகான, அர்த்தத்தைப் பாருங்கள். தாய் தன்னுடைய குழந்தைக்கு உயிர் கொடுக்கிறாள். ஆம். கருவில் உயிர் கொடுத்தவள். அந்த உயிர் உறைவதற்கு மெய் (உடல்) கொடுக்கிறாள். பத்துமாதம் சுமந்த பின்பு, அதை உலகில் உயிர் மெய்யாய் உலவ விடுகிறாள். இந்த உண்மையை உணர்த்துவதற்காகவே உயிர், மெய், உயிர்மெய், எழுத்துக்கள் சேர்ந்து, அம்மா என்ற அழகிய சொல் உருவானது என்பதை நினைக்கும்போது நம் முன்னோர்கள்மீது வியப்பும், நம் தமிழ்மொழிமீது மதிப்பும் உண்டாகிறது. வேறு எந்த மொழிச் சொல்லும் இந்த அம்மா என்ற சொல்லுக்கு இணையாகப் பொருள்தரவில்லை. தமிழுக்கும் அம்மாவுக்கும் அப்படி ஒரு அழகான தொடர்பு உண்டு. அம்மா – அப்பா இரண்டு சொற்களுமே உயிர், மெய், உயிர்மெய், எழுத்துக்களால் உருவானவை. இந்த இருவரினதும் கூட்டுறவிற்றானே குழந்தைகளுக்கு உயிர் கிடைக்கின்றது. அம்மா என்ற சொல்லில் வரும் ம், மா, இரண்டு எழுத்துக்களும் மெல்லின எழுத்துக்களாகும். அப்பா என்ற சொல்லில் வரும் ப், பா இரண்டும் வல்லின எழுத்துக்களாகும். அதாவது அம்மா: அன்பும், கருணையும் கொண்ட மென்மை யானவள் என்பதையும், அப்பா: ஆற்றலும் வலிமையும் கொண்ட வன்மையானவர் என்பதையும், இவ் வழகு தமிழ்ச் சொற்களில் அர்த்தம் நிறைத்துப் புகுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் காண்கிறோம்.

பெற்றவள் என்ற பெரும் சிறப்புக்கும், மரியாதைக்கும் உரியவளாக உலகம் முழுவதிலும் திகழ்பவளும், மதிக்கப்படு பவளும் அன்னையாகத்தான் இருக்கின்றாள். கடவுள் நம்பிக்கை தேவை இல்லை என்று கருதக்கூடிய சோவியத்யூனியன் போன்ற சோசலிச சீமைகளிற்கூட, சமுதாய அமைப்பில் அன்னைக்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. எத்தேசத்திலும் அன்னை என்பவள், கடவுளின் ஒரு அம்சமாகவே மதிக்கப் பெறுகின்றாள் என்பதை நாம் காண்கின்றோம். இவ்வளவு பெருமையும் மதிப்பும் அமைந்திருப்பது ஏன்? மனித சிருஷ்டிக்கு ஆதாரமாக இருப்பவள் அன்னை என்ற ஒரே காரணம் தான். ஒரு புதிய உயிரின் சிருஷ்டியில் அன்னையின் பங்கு மிகவும் மகத்தானது. ஈடு இணையற்றது. அன்னை என்ற ஒரு சாதனம் இல்லை என்றால், மனிதப் பிறவியில் புதிய சந்ததிக்கே வழியற்றுப் போயிருக்கும். அதனாற்றான் தாயையும், தாய்மையையும் அங்கு இங்கு என்னாதபடி உலகம் எங்கும் போற்றுகிறார்கள்; மதிக்கி றார்கள்; புகழ்கிறார்கள்.

சிறு புள்ளியாக அன்னையின் கருவறையிற் பிரவேசித்த நாம், சிறுகச் சிறுக நமக்கென ஒரு உருவத்தின் இயல்பினைப் பெற்று, பனிக்குடம் எனப்படும் நீர்நிறைந்த ஒரு பாதுகாப்பான பேழைக்குள்ளிருந்து உருவாகின்றோம். அன்னை உண்ணும் உணவிற்கூட, வயிற்றில் உள்ள நமக்கும் பங்கு கிடைக்கின்றது. அன்னை சுவாசிக்கும் உயிர்க்காற்று நமக்கும் சுவாசிக்க உதவுகிறது. பத்துமாதகாலக் குடியிருப்புக்குப் பிறகு வீட்டைக் காலி செய்துவிட்டு, புறவுலகை நோக்கி நாம் பயணப்படுகின்றோம். அந்தப் பத்துமாத காலத்தில் தாயின் உதரத்தில் வெறும் புள்ளியாக இருந்த நாம் உடலையும், உள்ளத்தையும், உயிரையும் பெற்று, உருவாகிவிடுகின்றோமே! மனித சக்திக்கு அப்பாற்பட்ட சிந்தனைக்கு எட்டாத இந்நிகழ்ச்சியின் இயக்கத்திற்கு ஆதாரமாய் இருப்பது ஒரு பேரருட் சக்தியாகும். ஒரு புள்ளிவடிவாக இருந்த நம்மை, அணு, அணுவாக மனித உயிராக, உருவமாகத் திட்டமிட்டு ஆக்கியது ஒரு உலகமகா சக்தியாக இருந்தாலும், அதற்குக் களம்

⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொடுத்து உதவியது தாயின் மணிவயிறல்லவா? அன்னையின் கருவறையில் உயிர் உழன்று கொண்டிருக்கும் வரை அது சுவாசிப்பதற்குத் தனிப்பட்ட ஏற்பாடு எதுவும் அமைந் திருக்கவில்லை. தன்னுடைய தொப்புளில் அமைந்திருக்கும் ஒரு கொடியின்மூலம் அன்னை சுவாசிக்கும் போது கருவிலுள்ள குழந்தையும் சுவாசத்திற்கான பிராணவாயுவைப் பெறுகின்றது. அதாவது, குழந்தையின் இருதயம் சுயமாக இயங்கவில்லை. குழந்தை கருவறை வாசத்தை முடித்துக்கொண்டு, மண்ணிற்கு வந்து சேர்ந்தவுடனேயே குழந்தையின் தொப்புட் கொடியை அறுத்து விடுகின்றார்கள். அக்கணமே ஏற்படும் குழந்தையின் முதலாவது அழுகுரலின்போது திடீரெனக் குழந்தையின் இதயம் சுயமாகத் துடித்து இயங்கத் தொடங்கி விடுகின்றது. இச் சந்தர்ப்பத்திற்றான், இறைவனின் பேரருளை நாம், எண்ணிப் பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. ஆலயத்தில் உயிர்ப்புள்ள மூலமூர்த்தியின் இருப்பிடமான மூலஸ்தானத்தை நாம் கருவறை என்றே அழைக்கின்றோம். உயிர்ப்புள்ள மனித சிருஷ்டிக்குரிய கருவறையைக் கொண்டுள்ள அன்னையின் மணிவயிற்றை குடியிருந்த கோவிலாகவே நாம் கருதிக்கொள்ள வேண்டும். "தாயிற் சிறந்தொரு கோவிலும் இல்லை" இந்த வாசகம் குடியிருந்த கோயிலாகிய அன்னையின் தெய்விகத் தன்மையையும், அன்னை மணிவயிற்றின் அபூர்வசக்தியினையும் தெளிவு படுத்தி நிற்கின்றது.

என்னுடைய நல்ல குணங்கள் அனைத்திற்கும், என் தாய்க்கு நான் கடமைப்பட்டவன் என்றார், அமெரிக்காவின் புகழ்பூத்த அதிபராக, செல்வாக்குப் பெற்றிருந்த ஆபிரகாம் லிங்கன். பிரான்ஸ்சு நாட்டில் நல்ல குடிமக்கள் உருவாக நல்ல தாய்மார்கள் பெருகவேண்டும். ஏனென்றால் பிள்ளைகளின் தலையெழுத்தை உருவாக்குபவள் தாயே என்றான் மாவீரன் நெப்போலியன். கோடிக் கணக்கான மக்களைக் கொன்று குவித்த கிட்லரின் இதயத்திற் கூட, தாய்ப்பாசத்தின் ஈரம் இருந்தது. இரண்டாம் உலகப் போரில் மோசமான தோல்வியைத் தழுவியதும் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட கிட்லர், தன்மார்பில் தாயின் படத்தைத் தழுவியபடி நாற்காலியில் சரிந்து கிடந்தான் என்று சரித்திரம் சொல்லுகின்றது.

அமெரிக்காவின் மெட்போர்ட் நகரில் வசித்தவர் ராஸ் ஆண்டர்சன் என்பவர். அவருடைய அன்னைக்கு உலகம் முழுவதும் சுற்றிப்பார்க்கவேண்டும் என்ற தாளாத ஆசை இருந்தது. ஆனால், அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவளுடைய உடல் நிலை ஒத்துழைக்கவில்லை. தன்னுடைய ஆசை நிறைவேறாத நிலை யிலேயே அவள் ஒருநாள் இறந்துபோய்விட்டாள். தாயின் ஆசை வாழும் போது நிறைவேறவில்லையே என்று வருந்திய ஆண்டர்சன், தாயின் அஸ்தியைச் (சாம்பலை) உலகம் முழுவதிலும் உள்ள முக்கியமான 250 நகரங்களுக்குக் கொண்டுசென்று, அவர் இறந்தபின் நிறைவேற்றி வைத்தான் என்பது வரலாறு. உறவுகளுக்கு மரியாதை இல்லை என்று கணிக்கப்படுகின்ற அமெரிக்காவில் ஒரு ராஸ் ஆண்டர்சனின் தாய்ப்பாசம் நம்மை யெல்லாம் வியக்கவைப்பதை இங்கே காண்கின்றோம்.

இன்றும்கூடத் தாய்ப்பாசம் ததும்பும் நன்மக்களைப் பார்க்கின்றோம். இந்தியாவின் வேலூரிற் சலவன் பேட்டையில் உள்ள பாரதியார் நகரில் வசிப்பவர் இராமச்சந்திரன். இவரின் வயது 49. இவருடைய தந்தை வெள்ளை நாயக்கர், தாய் ஜெகதாம்பாள், இவர் தனது பெற்றோருக்கு 36 இலட்சம் ரூபா செலவிற் கோவில் கட்டியுள்ளார். 8000 சதுர அடியிற் பொலிவு பெற்று ஜொலிக்கிறது. இக்கோவிற் கருவைறையில் 7 1/2 அடி உயர வெள்ளை நாயக்கர் சிலையும், 6 1/2 அடி உயரத்தில் ஜெகதாம்பாள் சிலையும் 1 1/2 அடி உயரத்தில் சிவலிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இச் சிலைகளின் மதிப்பு 6 இலட்சம் ரூபாவாகும். கடவுளை விட, தாய் தந்தை இருவரும் உயர்ந்தவர்கள் என்பதை உணர்த்துவதற் காகவே கோவிலையும் அமைத்து, பெற்றோரின் சிலைகளைப் பெரிதாக வைத்துள்ளேன் என்கிறார் அவர். கோவிலில் தினமும் காலை, மாலை பூசைகள் நடைபெறுகின்றது. இதற்கெனத் தனிப்பூசகரும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பள்ளி மாணவர், மாணவிகள் இந்தக் கோவிலைச் சென்று ஆச்சரியத்துடன் வழிபட்டுச் செல்கின்றனர். தாய் தந்தையரின் பெயரே அவ்விரு மூர்த்தங்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது. அவர் தனது தாய் இறந்த போது, அவரைப் பிரிய மனமில்லாமல், தன் வீட்டின் கொல்லைப் புறத்தில், காலியாக இருந்த இடத்தில், அவரது உடலை அடக்கம் செய்திருந்தார். இதே இடத்திலேயே பெற்றோருக்கு நினைவாலயம் அமைத்து வழிபட்டு வருகின்றார்.

பீகார் மாநிலம் சேக்பூரா மாவட்டத்தில் தோய்கெட் கிராமத்தைச் சேர்ந்தவர், ராம்பிரவேஷ் என்பவர். இவருக்கு வயது 50. கண்பார்வை இல்லாத, கால்களும், ஊனமுற்ற தன் தாயின் ஆசையை நிறைவேற்ற, ராம்பிரவேஷ் டிரைசைக்கிளில் வைத்து, இந்தியாவில் உள்ள புண்ணிய தலங்களுக்கு யாத்திரையாக அழைத்துச் சென்றிருக் கின்றார். தாய் சுமித்திரா தேவிக்கு வயது 86, கண் பார்வையற்று இரண்டு கால்களும் ஊனமாகி, எங்குமே செல்லமுடியாத நிலையில் இருந்த தாயார், இராமேஸ்வரம் யாத்திரை செய்யவேண்டுமென்ற தன் ஆசையை மகனிடம் தெரிவிக்கவே, சாதாரண விவசாயியான ராம்பிரவேஷ் அதிக பணம் செலவளிக்க முடியாத நிலையில், தாயின் ஆசையை நிறைவேற்றி வைக்க, டிரைசைக்கிளின் கூண்டு அமைத்து அதில் தாயை அமர வைத்து, பல புண்ணிய தலங்களைத் தரிசனம் செய்து, இராமேஸ்வரத்திலுள்ள இராமநாத சுவாமி கோவிலையும் தரிசிக்க வைத்துள்ளார். கோவிலுக்குள் தாயைத் தூக்கிச் சென்று தரிசனம் செய்ய வைத்து, தாயின் ஆசையை நிறைவேற்றி வைத்துள்ளார். தாயின் ஆசையை நிறைவேற்றி வைத்ததைத் திருப்தியுடன் கூறும் இவர், அதிக தூரம் டிரைசக்கிளில் பயணம் செய்வது கஷ்டமான காரிய மாக இருந்தாலும், தாயின் ஆசையை நிறைவேற்றியுள்ளேன் என்ற ஆத்ம திருப்தி எனக்கு மிகவும் பெரிதாகத் தெரிகின்றது எனப் பூரிப்புடன் கூறுகின்றார்.

கடந்த வருடம் வன்னியில் நடைபெற்ற போரில் சிக்கியிருந்த பல்லாயிரம் பொதுமக்களில் திருமதி அருளம்மா தம்பிராசாவும் ஒருவர். இவரது வயது 99, கிளிநொச்சி மாவட்டத்திற் பரந்தன் நகருக்கு அண்மையில் உள்ள நவஜீவனம் பகுதியில் வசித்த இவர், போர் மும்முரமாக நடைபெற்ற பகுதிக்கு இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து சென்று, அங்கிருந்து இடம்பெயர் முகாமுக்கும் வந்து சேர்ந்தார். 99 வயதான இவரை, இவரின் மக்கள் தம் கஷ்டங்களைப் புறந்தள்ளி, அவலங்களையும் உயிராபத்துக்களையும் தாண்டி, தாயையும் தாம் சென்ற இடமெல்லாம் பக்குவமாகக் கதிரையில் வைத்துத் தூக்கிச் சென்று காப்பாற்றினார்கள். தற்போது கொழும்பில் உறவினர்களுடன் வாழும் இவர், தனது 100 ஆவது பிறந்த தினத்தைத் தன் மக்களின் முன்னிலையில் சொந்த இடத்தில் கொண்டாட விரும்புவதாக ஐ. ஆர். ஓ என் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்ததாக அது தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. வயோதிபப் பருவத்தில் முதுமை நரைகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தாண்டி, தன்பிள்ளைகள் பரிவோடும் பாசத்தோடும் கண்ணை இமைபோலக் காத்துக் கொண்டுவந்து சேர்த்துள்ளமையை மனப்பூரிப்போடு கூறும் இவர், பிள்ளைகளின் தாய்ப் பாசத்தில் பொதிந்துள்ள மாண்பைத் தெரியப்படுத்தி நம்மையும் கடமை உணர்வுபூர்வமாக சிந்திக்க வைத்துள்ளார்.

மகான்கள் தாய்மையைப் போற்றக் கூறுகிறார்கள். தாயைத் தெய்வ நிலையில் வைத்து நெஞ்சுருகி நேசிப்பவர்கள். அவர்களிடம் இருந்து பிறந்ததுதான் 'God could not be every where and therefore he made mothers' என்னும் அற்புதமான பொன்மொழி; எல்லா இடங்களிலும் தெய்வம் இருக்க முடியாததால் இறைவன் தாயைப் படைத்தான் என்பதே இதன் பொருள். எவ்வளவு ஆழமான, அர்த்தமுள்ள வேதவாக்கியம் இது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

கன்னி மேரிக்குப் பிறந்த கர்த்தர் இயேசு, கல்வாரி மலையிற் சிலுவையில் அறையப்பட்ட போது கண்ணீர் மல்கச் சிலுவையில் தன் தாயையே நினைந்தார். பூமியை விட்டு சொர்க்கத்தை நோக்கி ஆன்மா பறக்கப்போகின்ற அந்தக் கடைசி நொடியில் கூடத் தொண்டர்கள் மனதிலும் நம்மைப் பெற்ற தாயின் நினைவு நிலைபெறவேண்டும் என்று உணர்த்துவதற்காகவே கர்த்தர் இயேசு தன்னுடைய மரணப் பொழுதில் தாயை நினைத்து உலக மக்களுக்கு முன்மாதிரியானார்கள்.

"தாயின் காலடியில்தான் சொர்க்கம் இருக்கின்றது" என நபிகள் பெருமானார் நவின்றார்கள். ஒரு மனிதனின் அழிக்கமுடியாத பாவங்களில் ஒன்றுதான், தன் தாயையும் தந்தையையும் புறக்கணித்தல் என்கிறது இஸ்லாமியர்களின் வேதமாகிய திருக்குர்-ஆன். நிலத்துக்கடியில் பரந்து விரிந்து கிடக்கின்ற நீரானது கிணற்றில் சுரந்து தெரிவதுபோல, பசுவின் உடலில் வியாபித்திருக்கும் பால் மடியில் இருக்கும் முலைக் காம்பினூடாக வருவதுபோல், கடவுளின் அன்பும், ஒவ்வொருவனுக்கும் அவனுடைய தாயின் மூலமாகத் தருகிறது என்பது வைதிக நூலாகிய இந்து மதத்தின் வாக்கு.

வளரும்...

# ஸ்ரீ மூலநாதர்

சிதம்பரத்திலே சுயம்புலிங்கமாக அநாதி காலமாக இருந்து வரும் இவர் ஸ்ரீ திருமூலட்டானேஸ்வரர் என்றும் குறிப்பிடப்படுகின்றார். பாதாள உலகத்திலுள்ள ஒரு மலையின் தலைப்பாகமே இந்த லிங்கம் எனச் சிதம்பர புராணம் கூறுகின்றது. திரி சஹஸ்ர முநீஸ்வரர்கள் (மூவாயிரவர்) இந்த மூர்த்தியை வேத விதிப்படி நீண்ட காலமாகவே வழிபட்டு வருகின்றனர். இம் மூர்த்தியின் பேரருளால் பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள் தைப்பூசத் திருநாளிலே ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆனந்தத் தாண்டவ தரிசனம் பெற்றனர்கள். மஹா மண்டபத்திலே வியாக்கிரபாதரும், பதஞ்சலியும், விநாயகரும், சுப்பிரமணியரும் விளங்குகின்றனர். இம்மூர்த்திக்கு நான்கு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. திருவாதிரையிலும், பிரதோஷத்திலும் சோமவாரத்திலும், மூலநக்ஷத்திரத்திலும் மஹா சிவராத்திரியிலும் விசேட பூஜைகள் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

குளிர் நிறைந்த மார்கழி மாதத்திலே கன்னிப் பெண்கள் அதிகாலையிலேயே எழுந்து கூட்டமாகச் சென்று நீராடும் வழக்கம் இருந்தது. வீண்பேச்சுக்களைத் தவிர்த்தனர். இறைவனைப் பற்றியே சிந்தித்தனர். நோன்பு இருந்தனர். கன்னிப் பெண்களின் மனம் தீயவழிகளிற் செல்வதை இது தடுத்தது. இந்த நடைமுறை தொடர்வது இன்றியமையாதது.

# சமயம் ஒரு வாழ்வியல் - 23

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இந்துசமயம் பெண்கள் வாழ்வியல் நடைமுறைகளோடு வழிபாட்டையும் இணைத்துள்ளது. காலை தொடக்கம் இரவு வரை குடும்பக் கடமைகளைச் செய்யும் பெண் சமய அறிவும் பெற்றுவிடுகின்றாள். இறைவழிபாடு வாழ்க்கைக்கு நன்மை தருமென்பதைப் பெண்களே எல்லோருக்கும் உணர்த்தியுள்ளனர். தாயாகவும், தாரமாகவும் அவள் செய்கின்ற பணி சமயத்தைச் சார்ந்ததாகவும் அமைந்துள்ளது. தன்னையொத்த பெண்களோடு சேர்ந்து வழிபாடு செய்கின்ற வாழ்வியலை இருவர் பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். திருமால் வழிபாடு செய்த ஆண்டாளும், சிவனை வழிபட்ட மாணிக்கவாசகரும் பாடிய திருப்பாவை, திருவெம்பாவை இதற்குச் சான்றாக உள்ளன.

மார்கழி மாதத்திற் கன்னிப்பெண்களின் சமய வழிபாட்டிற் கடைப்பிடிக்கப்பட்ட சிறப்பான நடைமுறை ஒன்று இருந்துள்ளது. ஆண்டாள் அதனைச் சிறப்பாகப் பாடிக் குறிப்பிட்டுள்ளாள். "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாள்" என வழிபாட்டுக் காலத்தை வரையறை செய்து காட்டியுள்ளாள். மிகக் குளிரான மழை பெய்யுங்காலம் மார்கழி மாதம். இம்மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி வழிபாடு செய்யும் மரபு அக்காலத்தில் இருந்துள்ளது. இது அவர்கள் மனங்களைப் பண்படுத்தியது.

வீட்டிலே ஒரு சமய நடைமுறையைத் தொடர்ந்து பெண்ணே கடைப்பிடித்து வந்தாள். இல்லாள் என்ற உயர்ந்த தகுதி இல்லக் கடமைகளை நிறைவேற்றும் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அக்கடமைகளில் வழிபாட்டுக் கடமைகளைப் பேணி எதிர்காலத் தலைமுறையிடம் கையளிக்கவேண்டிய பொறுப்பையும் பெண்ணே ஏற்றிருந்தாள். இதனாற் சமயாசாரங்களைக் கவனித்துச் செயற்படும் ஆற்றலையும் அவள் பெற்றிருந்தாள்.

இன்றுவரை மார்கழி மாதத்தில் அனுட்டிக்கப்படும் திருப்பாவை, திருவெம்பாவை நடைமுறைகள் சமயம் ஒரு சிறந்த வாழ்வியலாக அமைந்ததை நன்கு உணர்த்தி நிற்கின்றன. ஆண்டாளும் மாணிக்கவாசகரும் அன்றைய பெண்களின் மார்கழி நோன்பைப் பாடலிலே பதிவுசெய்து வைத்ததற்கு அவர்களது பக்தியினை மட்டும் காரணமன்று. பெண்களின் சமூகக் கடமையைப் பிற்காலத்தவரும் பயிலவேண்டும் என்றும் விரும்பியுள்ளனர். மணமாகாத கன்னிப் பெண்களின் புலன் தீயவழிகளிற் செல்லாது கட்டுப்படுத்தி, இறைவனிடமே செல்வதற்கு இந்த நடைமுறை பயன்பட்டது என்று கருதினர்.

கோயில் வழிபாட்டில் மனதைச் செலுத்தும் ஒரு கூட்டு வழிபாடாகவும் இருந்தது. 'மார்கழி நீராடல்' என்ற நடைமுறை கூட்டாகவே நடைபெற்றுள்ளது. அவ்வாறு நீராடும்போது வீண்பேச்சுக்களைப் பேசாமல் இறை சிந்தனையோடு இருப்பதற்கும் பயிற்சி கிடைக்கும். மனதை உறுதிப்படுத்த நோன்பு இருக்கும் நடைமுறை கொண்டிருந்தது. நெய்யுண்ணோம், பால் உண்ணோம், செய்யாதன செய்யோம் என்று பல கட்டுப்பாடுகளைப் பெண்கள் தாமே விதித்துக் கொண்டு செயற்பட்டுள்ளனர். வீட்டிலிருந்து புறப்பட்டுத் தோழியருடன் சென்று பொய்கையிலே நீராடினர். திருக்கோயிலில் சென்று வழிபட்டனர். அவ்வாறு வழிபடும்போது மாரி மழையை வேண்டி வழிபட்டுள்ளனர்.

நீரில்லாமல் உலகில் எந்த உயிரும் வாழமுடியாது. அதனால் நீருக்காக வழிபாடு செய்யவேண்டியது இன்றியமையாதது என்பதை எல்லோருக்கும் உணர்த்தவேண்டியிருந்தது. தமிழர் வழிபாட்டில் நீராடல் மிக முக்கியமான ஒரு நடைமுறையாகும். அதனையும் மார்கழி நீராடல் உணர்த்துகிறது. திருப்பாவையும், திருவெம்பாவையும் சமயத்தளத்திலே நோக்கப்பட்டாலும், பொதுவான மனித வாழ்வியல் நிலையிலே இயற்கையோடு இணைந்த வாழ்வுமுறையையே காட்டி நிற்கின்றன. பக்திநிலையில் ஆண்டாளும், மாணிக்கவாசகரும் தம்முடைய மனப்பக்குவத்தை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், இன்றைய காலகட்டத்தில் இந்நடைமுறை பற்றிய தெளிவு ஒன்றும் வேண்டப்படுகிறது.

திருக்கோயில் வழிபாடு இன்று கலியாட்ட நிலையில் உருமாறி வருகிறது. உள்ளத்தைப் பண்படுத்தும் பயிற்சிக் கூடமான கோயிலில் கவர்ச்சி உணர்வே மிகுந்து நிற்கிறது. கோயில் என்பது எல்லோருக்கும் அமைதியைத் தரும் புனிதமான இடம் என்பதை முதியவரும் மறந்துவிட்டனர். மேலைத்தேயப் பண்பாட்டுக் கோலத்துடன் முதியவர் கோயிலுக்கு வந்தால் இளையவர் என் செய்வர்? அவர் வழியேதான் நடக்க முயல்வர். சமயம் ஒரு வாழ்வியலாக எம்மைப் பண்படுத்துகிறது என்பதை இளையவரும் எல்லோரும் உணரவேண்டும். இல்லாவிடில் காலம் அதை உணர்த்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ் மாலை

கவிஞர் திரு. இராசையா குகதாசன்

(இந்துசாதனம் – 2010 கார்த்திகை 16 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)

376. பிறப்பிறப் பில்லாப் பெம்மான் பிறையணி சிவனே யென்றும்
அறத்தொடு வழிபா டாற்ற வனுசரி மார்க்க மான
திறத்துடை சைவந் தானே செகத்துமெய்ச் சமய மென்றும்
பெறத்தகு பிரமா ணத்தாற் பீடுற எடுத்துச் சொன்னார்.

377. ஆதரிப் போர்கள் நாண அதிபல நியாயங் கொண்டே
பேதிவை ணவம தம்மேல் பெருகுகண் டனங்கள் சாற்றி
வாதிட வந்து கூடும் வைணவர் முன்ப தாக
ஓதரி யுண்மை யெல்லா முணர்த்தின ருலகர் காண.

378. அளியுரை கேட்ட சையா அவையினர் தேவர் கற்றோர்
தெளிவுடை ஹரியின் நேசர் தேர்சந்நி தான மெல்லாம்
ஒளிரவ றறிவு கண்டே உன்மத்தர் போல வாங்கே
களிகொழு நெஞ்சி னாலே கழலிணை தொழுதிட் டார்கள்.

379. அருந்தவ ருரைபோல் வாழ்வில் அறியிலம் முன்பி னென்றே
தருந்தவர் யார்க்கும் தாரா சாதுரா இரண்ட ழைத்தே
பெருந்தவர் மேனி சாத்தப் பெறாதவர் மறுத்த தோடு
பொருந்துவி ரோத மாகப் போடுதல் பிழையி தென்றார்.

380. பெருந்திரு விதிலை யென்றும் பெருகிடு வாஞ்சை சேரு
மருந்திரு வென்றே கூறா ராமையி லுளநெ கிழ்ந்தே
தருந்திரு வதனை யேற்கா தேகினிற் சபையர் தேவர்
வருந்துவ ரெனநி னைந்தே வாங்கிட அவரி சைந்தார்.

381. பண்பொடு இசைந்த பாங்கிற் பரவச மாகி (யி)ரண்டு
கண்களும் நீர்த மும்பக் கட்டியங் கணைத்துத் தேவர்
எண்ணரி சாது ராவும் ஏற்றபல் சீரு மாற்றி
நண்பர்க ளாகி முன்போல் நடந்திட வுளங்கொண் டார்கள்.

382. வெறுத்துரை புகழன்ற போதும் வெகுண்டில ரவையிற் றோன்ற
மறுத்துரை யாற்றுங் காலை மறுகிலர் பிழைக ளெல்லாம்
பொறுத்திடு மென்றே பின்னும் பொலிகவி தீட்டல் நெஞ்சில்
நிறுத்தியத் தேவர் மேலே நீளன்பு கொளநி னைந்தார்.

383. கற்றவர் தமையே கற்றார் காமுறு வார்க ளென்றே
நற்றவர் புகன்ற வாறே நாவலர் தாமும் நெஞ்சால்
பற்றில ராகி வாழ்ந்த பகைமையை நீக்கி யன்பாற்
பற்றுள ராயி னர்பாப் புலமையும் பாரிற் பார்த்தே.

384. அன்பின ரான பின்னே அருஞ்சைவ நூல்க ளெல்லாம்
பன்னியும் பரிசோ தித்தும் பதிப்பியு முலகு வேண்டும்
நன்நிதி காலந் தோறும் நாமீவ மென்றுங் கூறி
சென்றுற விடைகொ டுத்தார் சிந்தையில் மகிழ்வி னோடே.

385. கரந்தனைப் பற்று வார்மேற் கனிவுடை வதன ராகி
வரன்முறை மேவி யன்பார் வார்த்தையில் நன்றி கூறி
பரந்தெழு வார்த்தி யம்சுர் பக்கமு மிசையை மீட்ட
அரண்மனை யதனை விட்டே யகன்றன ரறிஞர் சூழ.

### மதுரை ஆசீர்வதிப்பு (1864)

386. மன்றுநின் றகன்றடுத்து உத்தர கோச மங்கை
சென்றுவத் தலத்து நாதன் திருவடி வணங்கி நீங்கி
பொன்றிடு முத்தி யீய்சிவ ராத்திரி விரதங் காக்க
மன்றுள னாட லீந்த மதுரையம் பதியிற் சேர்ந்தார்.

387. பண்டைய லாரி யர்போற் பருமுடி சூடி வந்தே
திண்டிறல் மன்னர் காணத் திருவிளை யாட லீந்த
மண்டிகழ் பதியை யாளும் மதுரைமீ னாட்சி பாதம்
தெண்டனிட் டிறைஞ்சி ஞான சம்பந்தர் மடத்தி ருந்தார்.

388. இருந்தநா வலரை நோக்கி யிருகரம் கூப்பிக் கோவில்
புரந்துமா பணிக ளாற்றும் புண்ணியர் நாடி வந்தே
திருந்துமீ னாட்சி யம்மை திருச்சந்நி தானத் துள்ளார்
அருந்துமா ருரைகள் நீவி ராற்றிடு மென்ற ழைத்தார்.

389. சீர்த்தியு ளால வாயிற் சிறப்பொடு சொக்க லிங்க
மூர்த்தியின் கீர்த்தி யும்மீ னாட்சியின் மாட்சி யோடு
ஈர்த்திடு சித்தாந் தத்தே விருவுயர் வவைவி ரித்தே
மாத்தவ ருரைசெய் தாரெம் மாந்தரும் விளங்கு மாறே.

390. நீறது தரித்த நிறையுருத் (தி)ராக்க மாலை
வீறுபடை பேச்சு மூலம் விளக்கிடும் பாங்கு பார்த்தே
பேறது விதனைக் கேட்கப் பெருந்தவம் செய்தோ மென்றே
மாறரு மகிழ்ச்சி கொண்டார் மதுரைமா நகரி நுள்ளார்.

391. இத்தகு வுரையை யீந்த வித்தவர் மகிழ நாங்க
ளித்தரை மதிக்கு மாறு இவர்க்குப சார மெல்லாம்
நித்தன தால யத்தே நிகழ்ந்திட வேண்டு மென்றே
தத்தம துளநி னைந்தே தலைப்பட்டா ரிவைக ளாற்ற.

392. பிரசங்க மழைபொ ழிந்த பெருமகன் நாவ லர்க்கு
அரன்பங்கு மீனாட் சிக்கே யளிப்பரி வட்டம் நீறு
பரங்கொண்ட வாரம் நீட்டி பன்மணி மாலை பூட்டி
கரங்கொண்டு இறையின் பேரால் க்வினாசி பொழிந்திட் டார்கள்.

393. மங்கள மேள வாத்யம் முழவொடு முரச வாத்யம்
சங்கவை வரிசை வாத்யம் குடைகொடி யால வட்டம்
தங்கரந் தாங்கு வோரத் தலைவரின் முன்பு நீட
அங்குளந் தணரத் தோர் அறிஞர்கள் புலவ ரெல்லாம்.

394. பக்கலும் மருங்குஞ் சூழ்ந்து பசுந்தமிழ் வாழ்த்துக் கூற
தொக்கிநில் வீதி தோறும் தோரணம் கும்பம் நாட்டி
சொக்கனின் கோயில் நின்று குடியிரு மடத்தில் விட்டே
தக்கவர் விடைபெற் றேகத் தாம்பணி கோவில் சென்றார்.

395. அம்மட மிருந்த காலை அருந்தவ ரொன்று கூடி
எம்மத மேன்மை யெல்லாம் எடுத்துரை செய்ய வேண்ட
அம்மகர் மகிழ நின்றே அருட்பிர சங்க மாரி
செம்பொருள் விளங்கு மாறே செகதல மதனிற் செய்தார்.

(வளரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனை மந்திரங்களிற் காணப்படும் அற்புதக் கருத்துக்களும், ஆனந்த இரசனையும் 1

சிந்தாமணி பூஷணம், பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா
B.A. (Hons) (கோப்பாய் சிவம்)

("இந்துசாதனம்" பத்திரிகையில் இதுவரை தொடர்ச்சியாக வெளிவந்து நிறைவுபெற்ற "எங்கள் பொருட்டு இறைவனுக்கு இவர் என்ன சொல்கிறார்?" என்ற கட்டுரை ஆன்மிக அன்பர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. பலர் அதனை ஆவலுடன் படித்துப் பாராட்டியமையால், அன்பர்களுக்கு நமது கிரியைகள், மந்திரங்கள் பற்றிய பொருள் விளக்கங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் பெருகிவருவது புரிகிறது. அதனால், அதே பாணியில் மீண்டும் தொடர்ந்து எதாவது எழுதவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

பொதுவாக, ஆலயங்களிற் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்புடையதும், அவர்கள் அதிகம் விரும்பி ஈடுபடுவதும் அர்ச்சனை என்ற செயற்பாடேயாகும். "அர்ச்சனை என்றால் என்ன?" என்பது பற்றிய விளக்கத்தையும், சில அர்ச்சனை மந்திரங்களின் பொருள்களையும் முந்திய தொடரில் அர்ச்சனை என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் விளக்கியிருந்தோம். இப்போது அதனை இன்னும் விரிவாக நோக்கலாம் என்றெண்ணுகின்றோம்.

எல்லாத் தெய்வங்களுக்கும் தனித்தனியே அர்ச்சனை மந்திரங்கள் இருக்கின்றன. ஒரு தெய்வத்தின் அர்ச்சனைகளை எடுத்து நோக்கினாலும் அஷ்டோத்தர சதம் - 108, திரிசதி - 300, சகஸ்ரம் - 1000 எனப் பலவிதமான எண்ணிக்கைகளில் அர்ச்சனை மந்திரங்கள் பெருகிக் காணப்படுகின்றன. புராண, இதிகாசங்களிற் காணப்படும் புராதனமான அர்ச்சனை மந்திரங்கள் முதல், பிற்கால அறிஞர்களால் உருவாக்கப்பட்டவையான மிகப்பல அர்ச்சனைகளை நாம் பயன்படுத்துகின்றோம்.

இந்த அர்ச்சனை மந்திரங்கள் சிலவற்றை நாம் எடுத்து ஆராய்ந்து அவற்றின் பொருள் விசேடங்களையும், இலக்கிய நயங்களையும், தத்துவ உட்பொருட்களையும் இரசித்துச் சுவைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பமாக, அர்ச்சனை என்ற முந்திய கட்டுரையின் சில பகுதிகளை மீண்டும் சொல்வது அவசியமாகின்றது. அதனால், கூறியதைக் கூறல் என்ற குற்றம் புதிய கட்டுரையின் ஆரம்பமாக வருவதையும் இதனைப் படிக்கும்போது கேட்டு அதனைத் தொடர்ந்து புதிய விடயங்களுக்கு வருவோம் எனக் கூறி அமைகின்றோம்.)

ஆலய வழிபாடு செய்யும் அடியவர்கள் பலரும் அர்ச்சனை செய்விப்பதிலே ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். தங்களதும் தங்களைச் சார்ந்தவர்களதும் பெயர், நட்சத்திரம் முதலியவற்றைச் சொல்லி இறைவனுக்கு அர்ச்சனை செய்விக்கின்றார்கள். அர்ச்சனை என்பதன் அர்த்தம் என்ன என்பதையோ அல்லது அர்ச்சனை செய்யப்படும்போது அங்கே என்ன சொல்லப்படுகிறது என்பதையோ புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருந்தாலும்கூட இறைவன் மீது பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர்கள் என்பதனால், அர்ச்சனை செய்வதன் மூலம் இறைவனை மகிழ்விக்க முடியும் - அவனது அருளைப் பெறமுடியும் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்.

அர்ச்சனை என்பது ஆலயக்கிரியைகளில் ஓர் அங்கம். அபிஷேகம், அலங்காரம், நைவேத்யம், தீபாராதனை, அர்ச்சனை, புஷ்பாஞ்சலி, வேதபாராயணம், திருமுறை ஓதல், ஆசீர்வாதம் என்று தொடர்கின்ற கிரியைகளின் வரிசையில் அர்ச்சனை இடம்பெறுவதைக் காணலாம்.

இந்த ஒழுங்கில் ஒரு காலத்துக்குரிய பூசை நிறைவுபெற்றதும் அடியார்களின் விருப்பம் நிறைவேற்றப்படுகிறது. அதுவரை நிகழ்ந்தது பொதுவாக அனைவருக்கும் உரியதாக; பரார்த்த பூஜையாக அமைகிறது. அடியார்கள் ஒவ்வொருவரதும் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களது பெயரில் செய்யப்படும் அர்ச்சனை வழிபாட்டை, அவர்களுக்கான ஆத்மார்த்த வழிபாடு என்றும் சொல்லலாம். (உண்மையில் ஒருவர் தமது ஆன்மாவைக் கருதிச் செய்கின்ற சந்தியாவந்தனம், சிவபூஜை முதலியனவே "ஆத்மார்த்த பூஜை" எனப்படும்.)

"அர்ச்" என்ற வடமொழி வினைச்சொல் வணக்கம், மரியாதை முதலிய பொருட்களைக் கொண்டது. எனவே, அர்ச்சனை என்பது வணங்குதல் என்ற பொருளைத் தரும். "நம" என்பதும் வணக்கம் என்ற பொருளை உடையதே. அதனால்தான் அர்ச்சனையின்போது "நம" என்றசொல் பயன்படுகின்றது.

அவ்வகையில் அமைந்த வணக்கம் செலுத்துகின்ற முறைதான் அர்ச்சனை என்பதாகும். இக்கிரியையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று: இறைவனைப் பல பெயர்கள் சொல்லி அழைத்து அமர்ந்து வணக்கம் சொல்வது. மற்றது: அவனது பாதங்களில் மலர் தூவி மகிழ்விப்பது. இவ்விரண்டும் ஒருசேர நிகழ்கின்றன.

ஒரு குழந்தையை அதன் தாய் பாசத்தின் மிகுதியால் பல பெயர்கள் சொல்லி அழைத்து மகிழ்வது கண்கூடு. இதேபோன்ற ஒரு பாவனை காதலர்களுக்கிடையிலும் உண்டு. "கண்ணே, மணியே, கற்கண்டே, கட்டிக் கரும்பே" என்றெல்லாம் இந்த அழைப்பு இருக்கும். இதையும் கடந்து செல்லமாக அழைக்கும் அழைப்பிற் சின்னச் சொற்கள், திட்டும் சொற்கள் கூட இடம்பெறுவதை அனுபவித்திருப்பீர்கள் பலர். ஆனால், இவை யாவற்றுக்கும் அடிப்படை அன்பு ஒன்றே. அன்போடு இவர் அழைக்கின்றார். அழைக்கப்படுபவர் அந்த அன்பில் திளைத்து மகிழ்கிறார். இதே செயற்பாடுதான் அர்ச்சனையிலும் காணப்படுகிறது.

இங்கு உச்சரிக்கப்படும் இறைவனின் பெயர்கள் சில அவனது தோற்றப் பொலிவுகளையும், அவனது திருக்கரங்கள்

22 ஆம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சமய மறுமலர்ச்சிக்கு வித்திடும் திருவாவடுதுறை ஆதீனம்

– நீர்வை தி. மயூரகிரிசர்மா

தமிழகத்தில் வெளிவரும் நாளிதழ்கள், மாதச் சஞ்சிகைகள் எல்லாம் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உரிய வகையில் உரிய விலையில் உடனுக்குடன் கிடைப்பதரிது. அதனால் அவை தரும் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் வாய்ப்பும் சிலவேளைகளில் இல்லாமற் போய்விடுகிறது. ஆனால், இணையம் இக்குறையை ஓரளவு தீர்த்து வைக்கிறது. இது நிற்க,

எப்போதுமே நம்மவர்களுக்குத் திருவாவடுதுறையாதீனம் பேரில் அளவற்ற பற்று; மிகுந்த ஈடுபாடு. அதற்குப் பல்வேறு காரணங்கள். ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், தாமோதரம் பிள்ளை என்று இலங்கைச் சைவப்பிள்ளைகளைச் சீரும் பேரும் தந்து சிறப்பித்த பெருமை அதற்கு உண்டு.

டாக்டர் உவே. சாமிநாதையர், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, போன்றவர்களைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். இவர்களால் ஆதீனத்திற்கும், ஆதீனத்தால் இவர்களுக்கும் கிடைத்த உயர்வுகளையும் ஓரளவு கேள்விப்பட்டிருக்கிறோம். இதனால் மாதச் சிவஞானயோகிகள் போல, நாமும்

*"கயிலாய பரம்பரையிற் சிவஞான*
*போத நெறி காட்டும் வெண்ணெய்*
*பயில் வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்*
*மெய்ஞான பானுவாகிக்*
*குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறை வாழ்*
*குரு நமச்சிவாய தேவன்*
*சயிலாதி மரபுடையான் திருமரபு*
*நீடூழி தழைக்க மாதோ!"*

என்று குரு மரபு வாழ்த்திசைத்து 600 ஆண்டுகளுக்கு முன் துறைசையாதீனத்தை ஸ்தாபித்த பேரருள். குரு நமச்சிவாய மூர்த்தி களையும் அவர் வழி நிற்கும் அருளாளர்களையும் போற்றி வருகிறோம்.

அண்மைய ஆண்டுகளில் ஆவடுதுறையாதீன இன்றைய குரு மஹா சந்நிதானம் ஸ்வாமிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததும், யாழ். சைவபரிபாலன சபைக்கு " சித்தாந்த சைவச்சுடர் நிலையம்" என்ற விருது கொடுத்ததும் இந்த ஆதீனம் பேரில், ஆர்வத்துடன் கூடிய பற்றுதலைத் தந்திருக்கிறது.

இவ்வார்வங்கள் உந்த இணைய தேடற்பொறிமூலம் சில நாள்களுக்கு முன், "திருவாவடுதுறை ஆதீனம்" என்று தேடினேன். சில மாதங்களுக்கு முன் இன்றைய மஹாசந்நிதானம் செய்த புரட்சி ஒன்று பற்றி குமுதம் இதழ் அறிக்கையிட்டிருந்தது.

ஆர்வம் மேம்பட அதனை வாசித்து உள்வாங்கிக் கொண்டேன். இறைபாதம், குருபாதம் பணிந்து நான் அறிந்துகொண்ட வகையில் சுருக்கமாக உங்களுடன் அதனைப் பகிர்ந்துகொள்கிறேன்.

⟶

---

*21ஆம் பக்கத் தொடர்ச்சி_*

தாங்குகின்ற ஆயுதங்கள், ஆடை அணிகலன்கள் முதலியவற்றை யும் வர்ணித்துப் போற்றுபவையாக அமையும். வேறு சில, அவனது வீரதீரச் செயல்கள், வெற்றிகள் முதலியவற்றைப் போற்றுபவையாக அமையும். இன்னும் சில அவனது அருட் சிறப்புக்களையும் கருணையையும் புகழ்ந்துரைத்து; நமது தேவைகளை வேண்டி நிற்பவையாக அமையும். இவ்வாறான நாமங்கள் நாலாம் வேற்றுமை யில் அமைந்து (கணேச – கணேசாய – கணபதிக்கு, தேவீ – தேவ்யை – தேவிக்கு, சிவாய – சிவனுக்கு, கேது –கேதவே – கேதுவுக்கு, கணபதி – கணபதயே – கணபதிக்கு என்றிவ்வாறு...) அதைத் தொடர்ந்து நமஹ (வணக்கம்) என்ற சொல்லோடு சேர்ந்து "இன்னாருக்கு வணக்கம்' என்ற பொருளிலேயே அனைத்து அர்ச்சனை நாமங்களும் அமையும்.

இறைவனைப் பலவிதமான பெயர்களால் அர்ச்சகர் அழைக்கின்றார். அந்த அழைப்புடன் சேர்ந்து ஒவ்வொரு அழைப்புக்கும் ஒவ்வொரு பூவாக மலர் சொரிவதும் நிகழ்கிறது. இரண்டு செயற்பாடுகளும் இறைவனை மகிழ்விப்பதனால் அவன் நமக்கு அருள்செய்கின்றான் என்பது நமது நம்பிக்கை.

அடுத்த இதழில்
"ஆனைமுகனை அர்ச்சிப்போம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 இடங்களில் கிளை மடங்களையுடையதும் 20 பெரிய திருக்கோயில்களை பரிபாலனம் செய்வதும் ஆகிய சிறப்புக்க திருவாவடுதுறையாதீனப் பற்றிய அரிய தகவலை அது சொல்கிறது. புகழ் பெற்ற திருவிடைமருதூர் மஹாலிங்க ஸ்வாமி கோயில், திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயில் எல்லாம் ஆதீன ஆளுகையிலேயே இயங்குகின்றன.

இத்தகைய பெருமை பெறும் ஆதீன இன்றைய குருமகா சந்நிதானமாக விளங்குபவர் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள். 07.04.1983 இல் ஞானபீடமேறிய ஸ்வாமிகளுக்குத் தற்போது அறுபது அகவையிருக்கும். இவர் தான் இந்த ஆதீனத்தை "புரட்சி ஆதீனம்" ஆக மாற்றியவர்.

பொறுப்பேற்றதும் தமக்கு ஸ்ரீலஸ்ரீ என்று இட்டுக்கொள்வதை மாற்றி "சீர்வளர் சீர்" என்று அழைத்துக் கொண்டார்.

மஹாசந்நிதானங்கள் பெருமரியாதையாக பல்லக்கில் பவனிவரும் வழக்கம் இருந்தது. ஆனால் அது சரியல்ல என்று ஸ்வாமிகள் நிறுத்திவிட்டார்.

இவர் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஒருநாள் மாலை நேரம் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள [illegible] தாழையூத்து என்ற ஊருக்குத் திடீர் விஜயம் ஒன்று மேற்கொண்டிருக்கிறார். அந்த ஊர் மக்கள் "அருந்ததியர்" சமூகத்தைச் சேர்ந்தவர்களாம்.

"அருந்ததியினருக்கு இட ஒதுக்கீடு" என்னெல்லாம் இப்போது இழுபறிப்படுகிறார்களே, அந்த அருந்ததியினர்தான். தீண்டத் தகாதவர்களான, ஒடுக்கப்பட்ட மக்களின் வீடு தேடி வந்த ஸ்வாமிகளைப் பற்றி அங்கே யாருக்கும் பெரிதாகத் தெரியாது. "ஆதீனம் ஒரு சாமி வாறார், வாங்க பாப்பம்" என்று மக்கள் கூடினர். ஊர் நாள் கோயிலில் பூஜை நடந்த பின் ஊர்க்கோயில் பூசாரி ஸ்வாமிகளின் நெற்றியில் நீறணிவித்தார். (சிவாச்சாரியார்கள், குருமார்கள் ஆதீன மஹா சந்நிதானங்களுக்கு சொற்பிரசாதம் விபூதி அளிப்பது வழக்கம். தன்னை தனக்கு அளிக்கும் மரியாதை அது)

இவையெல்லாவற்றிற்கும் சிறிதும் கவலைப்படாமல் மஹா சந்நிதானம் அங்கே சிறிய சமயச் சொற்பொழிவொன்றை ஆற்றினார். சிறுவர், சிறுமிகளுக்குத் திருக்குறள் புத்தகம் கொடுத்தார். கையில் கொடுத்த விபூதி அளிக்கும் ஆதீன சம்பிரதாயத்தை விட்டு விட்டு "தீண்டத்தகாத மக்கள்" என்று சொல்லப்பட்ட அவ்வூர் ஆடவர் நெற்றியில் நீறிட்டு ஆசி கூறினார்.

இவற்றையெல்லாம் விரிவாக எழுதியுள்ள குமுதம் நிறைவாக "போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் சிதிலமடைந்த இந்துக் கோயில்களைப் புதுப்பிக்க வேண்டும். அங்கு துன்பப்படுவோருக்கு உதவி செய்ய வேண்டும்" என்றும் ஸ்வாமிகள் கூறியதாக எழுதியிருக்கின்றதைப் பார்க்க மனம் மகிழ்கிறது. ஆதீனம் மென்மேலும் இலங்கையுடன் உறவினை மேம்படுத்தும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

நலிந்தோர், வறியோர், தாழ்த்தப்பட்டோர் என்று சமூகம் ஒதுக்கிவைத்த மக்களின் மேல் ஆழமான அக்கறையுடன் செயற்படும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பணிகள் போற்றப்பட வேண்டும். இந்துத் துறவிகளும் இந்துசமய நிறுவனங்களும் நல்லெண்ணத்துடன் ஆற்றும் இத்தகு பணிகளையும் நாம் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தில்லை ஆடவல்ல பெருமானின் திருவருளால் தமிழகத் தாய் — ஆதீனமான திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் இலங்கைவாசிகள் எல்லோருக்கும் உள்ள உறவு இன்னும் இறுகட்டும். இதற்கான, நம்பிக்கையை ஆதீனகர்த்தாவின் மேற்கூறிய குறிப்பு ஏற்படுத்தியது என்றால் மிகையல்ல.

எம் இளந் தலைமுறைகளிலும் நாவலர் பெருமான்களும் தாமோதரம்பிள்ளைகளும் உ.வே. ஸ்வாமிநாதையர்களும் மீனாட்சி சுந்தரம்பிள்ளைகளும் எழுச்சி பெறுவர். திருவாவடுதுறைப் போல் தீவிர பக்தர்களைப் பெற்றுத்தர நம்பிக்கையுடன் போற்றுவோம்.

ஃ

## ஸ்ரீ பரமானந்த கூபம்

சிதம்பரத் தலத்திலுள்ள மிகவும் விசேடமான திருமஞ்சனக் கிணறு இது. பார்வதி தேவியின் பார்வையால் அமைக்கப்பட்டது. இதிலிருந்து எடுக்கும் நீராலே ஸ்ரீ நடராஜ மூர்த்தி, ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர், ஸ்ரீ இரத்தினசபாபதிமூர்த்தி முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெறுகின்றது. ஐப்பசி மாத சுக்கில நவமியில் கங்காதேவி இங்கு வருவதாக நம்பப்படுகின்றது. வெண்மையும் சுவையுமுள்ள நீருடன் கூடிய இந்தக் கிணறு என்றும் வற்றாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# காற்றில் மிதந்து காதில் விழுந்து கருத்திற் பதிந்தவை

## யாழ்ப்பாண வரலாறு

எதிர்காலச் சந்ததியினர் யாழ்ப்பாண வரலாற்றைக் கற்றுக்கொள்வதற்கு ஏற்றவகையில் அதன் வரலாறு சரியான முறையில் முழுமையாக வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். நல்லூரை இராசதானியாகக்கொண்ட வரலாறாக மட்டும் அதைக் கருதக் கூடாது. கந்தரோடை, சிங்கைநகர், வல்லிபுரம், சாட்டி, காங்கேசன்துறை, தீவகம் போன்ற பல்வேறு பிரதேசத்து வரலாறுகளும் இணைந்ததாக இருக்கவேண்டும்.

– பேராசிரியர் இ. குமாரவடிவேல்

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற "வரலாற்று உலா" வெளியீட்டு விழாவில்.

## பிஞ்சு உள்ளங்களில் நல்ல குணங்கள்

எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒத்தனவாக இருக்கும்போது நாம் நல்ல பயனைப் பெற முடியும். மனதைத் தூய்மையாக்கி உண்மையைப் பேசாவிட்டால் வாழ்வில் உயர்வடைய முடியாது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களால்தான் நாட்டிற் பிரச்சனைகள், வன்முறைகள் தோன்றுகின்றன. பிஞ்சு உள்ளங்களில் பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற நல்ல குணங்களை விதைக்க வேண்டும். ஆசிரியர்கள் எப்போதும் முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

– நீதிபதி இ. வசந்தசேனன்,

செட்டித்தெரு மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில்.

## திட்டமிட்டு ......

திருகோணமலை மாவட்டத்திலுள்ள, தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிஷமான கன்னியா வெந்நீரூற்று, தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் திட்டமிட்டுச் சுவீகரிக்கப்பட்டுள்ளது. மதநம்பிக்கை சார்ந்த கொம்புமுறித்தல் என்னும் விளையாட்டுக்காக மூதூர் பள்ளிக்குடியிருப்பு என்ற கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த அம்மன் சிலை கடற்படையினரால் உடைத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கல்லடிக் கிராமத்தில் இந்து ஆலயம் அழிக்கப்பட்டு அங்கு புத்த விகாரை அமைக்கப்படுகின்றது.

– நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன்

நாடாளுமன்றக் கூட்டத்தில்

## சைவ சமயமே உண்மைச் சமயம்

மனிதனது வாழ்வை நெறிப்படுத்தி ஆன்மீக வழியைக் காட்டுவது சமயம். நல்ல சமயத்துக்கு அடையாளம் எல்லோரையும் ஈடேற்றுவது. அறிவு சார்ந்தவர்களுக்குச் சாத்திரமூலம் அறிவு மார்க்கத்தையும் தோத்திரம் மூலம் பக்தி மார்க்கத்தையும் காட்டி இறைவனை அடைய வழி செய்கின்ற நமது சைவ சமயமே உலகில் உண்மைச் சமயம் என நான் கருதுகின்றேன். கீழ் நிலையில் உள்ளவர்களையும் உயர்நிலைக்குக் கொண்டுவந்து ஆன்ம ஈடேற்றம் கொடுத்த உயர் சமயம் சைவசமயம்.

– கம்பவாரிதி இ. ஜெயராஜ்

நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற "பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்" நூல் வெளியீட்டு விழாவில்.

## நாவலர் காட்டிய நன்நெறி

கல்வியழகும், தெய்வ நெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத் துடித்தவர் நாவலர் பெருமான். இலவசக் கல்வி, இலவச நூல்கள், தாய்மொழிக் கல்வி என்று நாம் பெருமைப்படும் சாதனைகளை அன்றே நிலைநாட்டியவர் நாவலர். காலையில் எழுவதிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும்வரை ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்க விழுமியங்களை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும், அழகாக எடுத்துச் சொன்னவர் நாவலர்.

– பேராசிரியர் சி. சிவலிங்கராசா

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவில்.

*Edited & Published by Mr.S.Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai, No.450, K.K.S. Road, Jaffna & Printed at Harikanan Printers, No.424, K.K.S. Road, Jaffna. 16.12.2010 (1st Day of Markaliththingal). Phone: 021 222 7678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org